88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

விலை ரூ 2/=

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

Physics: திரு. வர்ணம்
Chemistry: திரு. தில்லைநாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாகநாதன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஞூ மாசி மீ 3 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 5 (15-02-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:4

## கருத்துக் கலசம்

— மயூரா —

உலக ஜீவராசிகளுக்கு உயிரனையது நீர். அவற்றின் உடலில் ஒரு பகுதி நீரே. உணவின்றிச் சில நாட்களைப் போக்கினாலும் நீர் இன்றி உயிர் வாழ்வது மிகமிகக் கஷ்டம்.

தமிழில் பேச்சு வழக்கில் ஒருவரை விழிக்கும் போது 'நீர்' என்று அழைக்கிறோம்.

அதற்கு இப்படி ஒரு வியாக்கியானம் தரப்படுவது உண்டு. மனித உடம்பில் குறிப்பிட்ட பகுதி நீர். இரண்டாமவரைப் பார்த்து 'நீர்' என்று விழிக்கும் போது, முதலாமவரின் உடலில் அந்த இரண்டாமவரும் இருக்கிறார் என்ற அர்த்தத்தில் அவ்வாறு அழைக்கப்பட்டதாம். அதாவது என்னுள் அடுத்தவனும் இருக்கிறான் என்ற சகோதரத்துவ உணர்வை ஏற்படுத்துவதாக அந்தச் சொல் அமைக்கப்பட்டதாகக் கூறுவோரும் உளர்.

தமிழரின் ஒவ்வொரு சொல்லும், எழுத்தும் அர்த்த புஷ்டியானது. ஆழமானது. தத்துவம் நிறைந்தது. பேச்சு வழக்கில் உள்ள சொற்களும் அவ்வாறே. அதுவும் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழின் சிறப்போ சிறப்புத்தான்! யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழ் செந்தமிழ் எனப் பாராட்டப்பட்டதும் உண்டு.

நீர் பல ரகம். குளிர்ந்த நீர். வெப்ப நீர். வெப்பமாக்கப்பட்டு ஆறிய நீர். குளிர்மைக்கு மறுசொல் தண்மை. தண்மையான நீர் – தண்ணீர்.

இந்தத் தண்ணீரின் மகத்துவமும் மாண்மியமும் மட்டில்லாதவை. மனித உணவில், உடல் நலத்தில், சுகாதாரத்தில் என்று அது மனித வாழ்வில் தலைகாட்டாத இடமே இல்லை.

அது மட்டுமன்றி, மனிதனின் பிரதான தொழிலான விவசாயத்தின் உயிர்நாடியாக விளங்குவதும் தண்ணீர் தான். தண்ணீர்–நீர் வளம் தான் விவசாயத்தின், விளைச்சலின் முதுகெலும்பு. நில வளம் தனித்து விளைச்சல் தராது. நீர் வளம் நிறைந்திருந்தால் மட்டுமே நிலம் கொழித்து, பயிர் செழித்து, விளைச்சல் பெருகி, பணம் பொலியும்.

எமது மண் வானம் பார்த்த பூமி. ஆயினும் இங்கு விவசாயம் தான் பிரதான தொழில். எனவே தண்ணீரைச் சிக்கனமாகப் பாவிக்க வேண்டிய அவசியம் உண்டு.

கிடைக்கும் தண்ணீரை விரயம் செய்யாது, அளவோடு பாசனம் செய்து இயன்றவரை கூடுதல் உற்பத்தியைப் பெற முயற்சிக்க வேண்டும்.

நீர் முகாமைத்துவத்தை எமது விவசாயிகள் ஒவ்வொருவரும் அறிவாலும் அனுபவத்தாலும் பெற] வேண்டும்.

கிளிநொச்சியில்

(8ஆம் பக்கம் பார்க்க)

# அடுத்த மாதத்தில் பெரும் தாக்குதல்

## கிழக்கு மாகாணத்தில்

### அரசு திட்டமிட்டிருப்பதாக போராளிகள் குற்றச்சாட்டு

லண்டன், பெப்.14

இலங்கையின் கிழக்குப் பகுதியில், குறிப்பாக திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் பெரும் இராணுவத் தாக்குதல் ஒன்றை அடுத்த மாதத்தில் நடத்த அந்த நாட்டு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறதாம்.

இவ்வாறு தமிழ்ப் போராளிகள் குற்றம்சாட்டி உள்ளனர் என்று பி. பி. ஸி. அறிவித்தது.

தமிழர் குழுக்களின் சார்பில் பேச வல்ல அதிகாரி ஒருவரே இந்தக் குற்றச்சாட்டைத் தெரிவித்ததாக விவரிக்கப்பட்டது.

இலங்கையின் பாதுகாப்புப் படைகள், ஹெலிக்கொப்டர், விமானங்கள் மூலம் தாக்கத் தொடங்கி விட்டன. அதனால் போராளிகளும் ரொக்கெட் லோஞ்சர்கள், ஏவுகணைகள் போன்ற நவீன ஆயுதங்களைப் பாவிக்கின்றனர்–

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் மிகப் பெரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை அடுத்த மாதத்தில் நடத்த இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது.

அதனாலேயே தமிழ்ப் போராளிகள் பக்கத்தில் ஆயுதங்களும், வீரர்களும் கிழக்குப் பகுதிக்கு விரைகிறார்கள். பெரும் தாக்குதலை எதிர்பார்த்தே அவர்கள் அங்கு விரைகிறார்கள்–

இவ்வாறு அந்தப் பேச்சாளர் தெரிவித்ததாக பி பி. ஸி. அறிவித்தது.

## சொக்லேட் கடத்தல்

மட்டக்களப்பு, பெப், 15

80,000 ரூபா பெறுமதியான சொக்லேட், லொறியுடன் கடத்தப்பட்டது.

கல்முனைநகரில் இச்சம்பவம் வியாழன் நள்ளிரவு இடம் பெற்றது.

எட்னா சொக்லேட் கம்பெனிக்குச் சேர்ந்த லொறியே கடத்தப்பட்டது.

சம்பவம் இடம்பெற்ற சமயத்தில் விற்பனை பிரதிநிதியே சாரதி ஆசனத்தில் இருந்தார்.

அவரையும் கிளீனரையும் இறக்கி விட்டே லொறி கடத்தப்பட்டது.

# தமிழர் மீதான இராணுவ நடவடிக்கை கடுமையாகிறது

### கடல் பாதுகாப்பு வலயம் குறித்து அமிர்

சென்னை, பெப். 14

தமிழர் மீது இலங்கை அரசு எடுத்துவரும் ராணுவ நடவடிக்கைகள் கடுமையாகுவதையே புதிய கரையோரப் பாதுகாப்பு வலயப் பிரகடனம் எடுத்துக் காட்டுகிறது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் குற்றஞ் சாட்டியுள்ளது.

புதிய பாதுகாப்பு வலயத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படுவர். தொழில் செய்ய முடியாத நிலை ஏற்படுகின்றது.

விவசாய நடவடிக்கைகளையும் கைவிடவேண்டி உள்ளது.

புதிய பாதுகாப்பு வலயத்தை இலங்கை அரசு உடனடியாக வாபஸ் வாங்கவேண்டும்.

இப்படி அறிக்கையில் கூட்டணி கேட்டுள்ளது.

### சுபநேரம்

15.2.1986

சனிக்கிழமை

சுபநேரம்:
3.33 முதல் 5 03 வரை

ராகுகாலம்:
9.33 முதல் 11 03 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ரத ஸப்தமி

## புனாணையில் இருவர் பலி

மட்டக்களப்பு, பெப். 15

புனாணைப் பகுதியில், பயணிகள் பஸ் ஒன்றை இனந் தெரியாத நபர்கள் கடந்த புதன் கிழமை தாக்கினராம்.

அச்சமயம் அந்த வழியால் வந்த அயுதப்படையினர் அக்கோஷ்டி மீது சுட்டதில் இரண்டு பேர் இறந்தனர்.

இப்படி அயுதப்படை வட்டாரங்கள் கூறின.

# படையினர் தாக்குதலில்

## பாதிப்பு அப்பாவி மக்களுக்கே!

### மோதும் இருசாராரையும் அமெரிக்கா கண்டிக்கிறது

வாஷிங்டன், பெப்.14

தீவிரவாதிகளைத் தாக்குவதாகக் கூறி இலங்கை ஆயுதப்படையினர் நடத்தும் பதில் தாக்குதலால் அப்பாவி மக்களே பாதிக்கப்படுகிறார்கள்.

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

உலகில் பல நாடுகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்தும் இந்த அறிக்கையில் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை பற்றி அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது;

சன நெருக்கடி உள்ள கிராமப் புறங்களில் தீவிரவாதிகள் கண்ணி வெடிகளை வைக்கிறார்கள்.

இதனால் ஆயுதப்படையினர் பாதிக்கப்படுகின்றனர். இதற்குப் பதில் தாக்குதலாக அயுதப் படையினர் அப்பகுதியில் உள்ள அப்பாவி மக்களைச் சுடுகின்றனர்.

தீவிரவாதிகள் – இராணுவத்தினர் மோதல்களில் பாதிக்கப்படுபவர்கள் பொதுமக்கள் தான்.

இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## விடுவிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.15

கடந்த 7 ஆம் திகதி கூட்டிச் செல்லப்பட்ட சிவகடாட்சம், சிறீஸ்கந்தன் ஆகிய வர்த்தகர்களை மனிதாபிமான அடிப்படையில் 17-2-86க்கு முன்னர் விடுவிக்கும்படி யாழ் வர்த்தகர்கள் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சூட்டுக்கு மூவர் பலி

மட்டக்களப்பு, பெப்.15

மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை நோக்கி ஆயுதப்படையினர் சுட்டதில் 3 பேர் மரணமானார்கள்.

கரடியனாறு என்னும் இடத்தில் வியாழன் அதிகாலை 2 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

## முகமூடி அணிந்த கறுப்புச் சட்டைக்காரர்

### பாடசாலையில் கொள்ளை

யாழ்ப்பாணம், பெப். 15

வவுனியா பூவரசங்குளத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் நேற்றுக் கறுப்புச் சட்டைச் சீருடையினர் திடீரெனப் புகுந்து அட்டகாசம் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

இவர்கள் முகமூடி அணிந்திருந்தார்கள் என்றும் ஆயுதபாணிகளாக இருந்தார்கள் என்றும் அறியவருகிறது.

பாடசாலைக்குள் புகுந்த 5 முகமூடிக் கறுப்புச் சட்டையினர் பாடசாலையில் இருந்த ஆசிரியர்கள், மாணவர்களின் பெறுமதி மிக்கப் பொருள்களைக் கொள்ளையடித்தனர். நகைகள், கைக்கடிகாரங்கள் என்பனவும் கொள்ளையடிக்கப்பட்ட பொருள்களில் அடங்கும்.

சுமார் ஐந்து நிமிடங்களில் தமது விஷயம் முடிந்ததும் வானத்தை நோக்கிச் சுட்டுக்கொண்டே திரும்பிச் சென்றனர்.



சுட்டும் விழிச் சுடர்தான் — கண்ணம்மா!
சூரிய சந்திரரோ?
வட்டக் கரிய விழி — கண்ணம்மா!
வான கருமைக் கொல்லோ?
பட்டுக் கருநீலப் — புடைவை
பதித்த நல் வயிரம்
நட்டநடு நிசியில் — தெரியும்
நக்ஷத் திரங்களடீ!

- மகாகவி பாரதியார் -

## சிங்களவர் கைது!

கொழும்பு, பெப். 15

ஹபரணைக் காட்டில் தலைமறைவாக இருந்த மூன்று சிங்கள இளைஞர்களைப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர்.

ஓர் இளைஞரிடம் துவக்கு ஒன்று இருந்தது.

மூன்று சிங்கள இளைஞர்களும் தீவிர இடதுசாரி இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

## இடைத் தேர்தல் மார்ச்சில்

கொழும்பு, பெப். 15

மார்ச் முதலாம் வாரத்தில் அக்மீமன இடைத் தேர்தல் நடைபெற இருப்பதாக அறியப்படுகிறது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றில் காலியான எம். பி. பதவிக்கே இந்த இடைத் தேர்தல் நடைபெற உள்ளது.

பதவி இழந்த திரு. ரிச்சர்ட் பத்திரான சுதந்திரக்கட்சி சார்பில் மீண்டும் போட்டியிடுவார்

## கடத்தப்பட்டது

மட்டக்களப்பு, பெப், 15

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பிரயாணிகள் இயந்திரப் படகு வியாழக்கிழமை நள்ளிரவு இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டது.

# ராணுவத் தீர்வு முயற்சி முழுநாட்டுக்கும் ஆபத்து

### கொல்வின் அபாயக் குரல்

கொழும்பு, பெப். 15

வடக்கு – கிழக்குப் பகுதிகளில் காணும் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முயல்வது, முழு நாட்டின் பாதுகாப்புக்குமே பெரும் அச்சுறுத்தலாக அமையும்.

பழம் பெரும் அரசியல்வாதியும் லங்கா சமசமாஜக் கட்சித் தலைவருமான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

'குடியுரிமை' என்ற தலைப்பில் டாக்டர் டி சில்வா வியாழன் மாலை கட்சி அலுவலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசினார்.

அச்சமயமே மேற்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கில் வருமானவரி வசூல்

### பெருமளவு வீழ்ச்சி

கொழும்பு, பெப்.15

1985 ஆம் ஆண்டில் யாழ் குடாநாட்டில் இருந்து 2 கோடி ரூபா தான் வருமானவரியாக இலங்கை அரசுக்குக் கிடைத்தது.

1984 ஆம் ஆண்டில் இத்தொகை 3 கோடி 90 லட்சமாக இருந்தது.

1983 இல் இத்தொகை 4 கோடி 30 லட்சமாக இருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்திலும் வருமானவரி வசூலிப்பில் வீழ்ச்சி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

1983 இல் ஒன்றரைக் கோடி ரூபா வசூலிக்கப்பட்டது 1984 இல் 1 கோடி 40 லட்சம் ரூபாவாகக் குறைந்தது.

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஊர்காவல் படை

### முஸ்லிம்களுக்கு மட்டுமே இடம்

கொழும்பு, பெப். 15

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊர்காவல் படைகள் அமைக்கப்படவுள்ளன.

முஸ்லிம்களை மட்டுமே கொண்டதாக ஊர்காவல் படைகள் இருக்கும்.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் முடிவடைந்து விட்டதாகவும் தெரியவருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பொலீஸார் மற்றும் அயுதப் படையினருக்கு ஊர்காவல் படையினர் உதவுவர்.

## பாலைதீவுப் பயங்கரம்

### உயிர் தப்பியவர் சூட்டுக் காயங்களுடன் இராணுவ ஆஸ்பத்திரியில்

நல்லூர், பெப். 15

கடந்த செவ்வாய்க் கிழமை பாலைதீவுக் கடலில் நடந்த பயங்கர சம்பவத்தில் உயிராபத்து இன்றித் தப்பி, கடற் படையினரால் கைது செய்யப்பட்ட ஞானப் பிரகாசம் அஸ்நோபர் காயங்களுக்குள்ளாகிய நிலையில் பலாலி இராணுவ முகாம் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

பலாலி இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நான்கு குருநகர் மீனவர்களில் ஒருவரான ஞானப்பிரகாசம் அஸ்நோடரின் மனைவி நேற்று யாழ் கோட்டை முகாமுக்குச் சென்று தமது கணவர் நிலைபற்றி கேட்டார்.

அப்போது இராணுவ

(8ஆம் பக்கம் பார்க்க)

## ★ மட்டக்களப்பில் மூன்றுதமிழ்இளைஞர்கள் சடலங்களாக மீட்பு

### ஆயுதப்படை அழைத்துச் சென்ற மறுநாள் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு, பெப்.15

மட்டக்களப்பு, மீராவோடை தமிழ்ப் பிரிவில் உள்ள ஆற்றங்கரை ஓரத்தில் 3 தமிழ் இளைஞர்களின் சடலங்கள் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டன.

சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

இறந்த 3 இளைஞர்களும் பேத்தாளைக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்.

முதல்நாள் தான் பேத்தாளைக் கிராமத்தில் இருந்து 6 தமிழ் இளைஞர்களை ஆயுதப்படையினர் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

மற்ற 3 இளைஞர்கள் பற்றிய[illegible]தகவல் எதுவும் இன்னும் கிடைக்கவில்லை.

சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்ட மூன்று இளைஞர்களின் பெயர்கள் வருமாறு:

1. கி. குமாரலிங்கம் (வயது 18)
2. இ. மகேந்திரராஜா (வயது 20)
3. ந. யோகேந்திரன் (வயது 20)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிலிப்பீன்ஸ் மற்ருெரு வியட்னுமாக மாறுமா?

பிலிப்பீன்ஸ் நாட்டில் கடந்த 7 ஆம் திகதி துவங்கி நடந்த தேர்தல் உலகின் பிரச்சினைகளுள் ஒன்ருகக் கருதப்படுகிறது.

இந்தத் தேர்தல் எப்படி நடைபெறுகிறது என கண்காணிக்க பல நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் சென்ருர்கள்.

அமெரிக்கா அனுப்பியிருந்த கண்காணிப்புக் குழுவில் 20 உறுப்பினர்கள் இருந்தனர்.

கூடிய அளவுக்கு மார்க்கோஸ் ஆதரவு நாடு என்று கருதப்படும் அமெரிக்காவின் கண்காணிப்

**இவ்வார முக்கிய சம்பவம்**

பாளர்களும் நடந்து முடிந்த தேர்தல் பற்றி கருத்து வெளியிட்ட போது; அதிகார துஷ்பிரயோகங்களும், ஊழல்களும், மோசடிகளும் நடந்துள்ளதாகவே தெரிவித்துள்ளார்கள்.

தேர்தற் காலத்தில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களும், கொலைகளும் அந்தநாட்டில் ஜனநாயக ரீதியில் தேர்தல் நடைபெறவில்லை என்ற சந்தேகக் கருத்தையே எழுப்பியுள்ளது

வாக்குகளை எண்ணும் பணியில் ஈடுபட்டவர்களின் பகிஷ்கரிப்பும் மற்றும் அங்கு மேற்கொள்ளப்பட்ட தாமத, தடங்கல்களும் இதற்குள் ஏதோ மர்மம் இருக்கிறது என்று எண்ணத் தூண்டியுள்ளது.

இதற்கிடையே கடைசிக் கட்டங்களில் மார்க்கோஸ் இராணுவச் சட்டத்தை அங்கு பிறப்பிக்கக் கூடுமெனவும் எதிர்க்கட்சி வேட்பாளரான திருமதி கொருசன் அக்கியூனோ தேர்தல் கூட்டங்களில் தனதுசந்தேகத்தை வெளியிட்டு வந்துள்ளார்.

தேர்தலுக்கு முன் தினம் திருமதி அக்கியூனோவின் உயர் ஆலோசகர் ஒருவர் சுடப்பட்டார்.

ஏற்கெனவே தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடிக்கும் வேளையில் திருமதி அக்கியூனோவின் கைஓங்குகிறதோ என்ற சந்தேகத்தில் பிலிப்பீன்ஸின் பல பகுதிகளிலும் இராணுவம் உஷார் நிலையில் வைக்கப்பட்டது.

கம்யூனிஸ்ட் கெரில்லாக்களின் ஊடுருவல் நகரின் கேந்திர இடங்களுக்குள் நடப்பதாகக் காரணம் கூறப்பட்டது.

படைகளின் தளபதி பல இடங்களில் தடைமுகாம்கள் போடுவதற்கு உத்தரவிட்டார்.

டாங்கிகளும், கவச வாகனங்களும் தேர்தற் காலங்களில் நகர வீதிகளிற் பெருந்தொகையாக வலம் வந்ததாகச் செய்திகள் தெரிவித்திருந்தன.

என்ன இருந்தாலும் 20 ஆண்டு கால ஆட்சியை இழக்க அவருக்கு மனம் வருமா?

உறவினர்களின் ஆட்சி

## இராணுவ நலன்களில் அமெரிக்கா அக்கறை

நடப்பதாகவே எதிர்க் கட்சிகளும் அரசியல் விமர்சகர்களும் தொடர்ந்து கண்டித்து வந்துள்ளார்கள்.

◯ எம். சிவலிங்கம் ◯

ஜனுதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் இந்த தேர்தலுக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டிருக்க வேண்டுமென உத்தியோகப்பற்றற்ற தகவல்கள் புள்ளி விவரங்களை வெளியிட்டிருந்தன.

அந்த செலவுகள் பிலிப்பீன்ஸ் நாட்டின் ஒரு வருட உற்பத்தி வருமானத்தை விட கூடியதாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது.

அரசியல் களத்தின் அதிமுக்கிய பதவிகளிலும் இராணுவ உயர் பதவிகளிலும் மார்க்கோஸின் நெருங்கிய உறவினர்களே அமர்த்தப்பட்டுள்ளனர்.

படைகளின் தலைமைப் பதவியிலிருக்கும் வேபியன்வேர் இவரது நெருங்கிய உறவினர்

அக்கியூனோ கொலையில் இவர் சநதேக நபராகக் கருதப்பட்டுப் பின் நீதிமன்றில் விடுதலை செய்யப்பட்டவர்.

உடனடியாகவே உயர் பதவியிலும் அமர்த்தப்பட்டார்.

இவரது பதவியில் இருந்த ஜெனரல் பிடல் றமோஸ் பதவி இறக்கப்பட்டார்.

தீவிர அமெரிக்க ஆதரவாளராக அவர் இருந்ததாகவும் இந்தப் பதவி மாற்றம் அமெரிக்காவுக்கு அதிருப்தியை உண்டாக்கி விட்டிருக்கவேண்டுமெனவும் அப்போது கருதப்பட்டது.

எனினும் மார்க்கோஸ் தனது அதிகாரங்களை விஸ்தரிப்பதிலும் தனது ஆட்களை வைத்து உறுதிப்படுத்துவதிலும் அதிக அக்கறையுடன் இருந்து வந்துள்ளார்.

ஜெனரல் டிகஸ்மஸ், ஜெ

## பணப்பரிமாறலும் படை ஏற்பாடும் மார்க்கோஸின் தேர்தல் ஆயுதங்கள்

னரல் அன்டோனியோ பல பொக்ஸ் போன்ற இராணுவ அதிகாரிகள் எதிர்க்கட்சிகளின் செல்வாக்கு மிக்க இடங்களில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டார்கள்.

இந்த விடயங்களையும் மாற்றங்களையும் அவதானித்து வந்த விமர்சகர்கள் அப்போதைக்கப்போது அந்த நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தேர்தலில் வெற்றி பெறுவதற்கான மார்க்கோஸின் முன் ஏற்பாடுகளாக இவை இருந்தன.

இதனலேயே பணத்தின் மூலம் ஊழல், மோசடி நடவடிக்கைகளை உருவாக்கியும் இராணுவ அச்சுறுத்தலை ஏற்படுத்தியும் வந்ததாக மார்க்கோஸ் மீது பலரும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தநிலையில் அமெரிக்கா தனது தளத்தை பிலிப்பீன்ஸில் தொடர்ந்து வைத்திருப்பதில் கண்ணும் கருத்துமாகவே இருக்கிறது

இந்த இராணுவ தள விடயம் தொடர்பாக திருமதி. அக்கியூனோ அமெரிக்க சந்தேகங்களை ஏற்கெனவே நீக்கி இருந்தாலும் இடதுசாரி ஆதரவாளர் அவர் என்ற சந்தேகம் அமெரிக்காவின் அடிமனத்தில் இருக்கவே செய்கிறது.

இதனல் தான் ஏற்ற முறையிலான அரசொன்றை அமைத்து ஜனநாயகத்தைக் காப்பாற்றுமாறு திருமதி அக்கியூனோவுக்கு அமெரிக்கா விடுத்துள்ள அழைப்பு அவருக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

மக்களின் அபிலாஷைகளுக்கெதிராக எனது வெற்றியை அமெரிக்கா ஏமாற்றிவிட முயற்சிக்கிறது என திருமதி. அக்கியூனோ கண்டித்துள்ளார்.

அமெரிக்காவில் வாழும் பிலிப்பீனியர்களின் பல அமைப்புக்களும் மார்க்கோஸின் பிற்போக்கு ஆட்சி தூக்கியெறியப்படவேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளன. மார்க்கோஸுக்கு சாதகமாக நடந்து கொள்ள வேண்டாமெனவும் அமெரிக்காவை அந்த அமைப்புகள் மேலும் கேட்டுள்ளன.

இந்தநிலையில் பிலிப்பீன்ஸ் நிலைமைகளை அவதானிக்க தனது அரசு அதிகாரி பிலிப் ஹபீப்பை அங்கு அனுப்புவதாக அதிபர் றேகன் தெரிவித்தார்

அமெரிக்காவின் அக்கறையெல்லாம் பிலிப்பீன்ஸில் இராணுவ தளங்கள் தனக்கு இருப்பதை உறுதி செய்வது தான்.

அந்தப் பிராந்தியங்களில் ரஷ்யா தனது

**பிலிப்பீன்ஸ் தேர்தல்**

கடற்படைத் தளங்களை விஸ்தரிப்பதாக செயற்கையான காரணங்களைக் கூறிக்கொண்டே அமெரிக்கா தனது தளங்களை ஆசியபிராந்தியத்தில் விஸ்தரித்து வருகிறது.

தனது நலன்களைக் காப்பதில் அமெரிக்கா பிலிப்பீன்ஸில் நடவடிக்கைகளை மறைமுகமாக மேற்கொள்ளக் கூடும்.

இந்த நிலையில் பிலிப்பீன்ஸிலும் இன்னெரு வடிவில் யுத்த கால வியட்நாம் உருவாகி விடுமோ?

# கலையுணர்வு மிக்க கைலாசபதி

நினைத்துப் பார்ப்பவர்:

**நவாலியூர் நா. சச்சிதானந்தன்**

அப்பொழுது நான் கொழும்பில் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த பிரம்மஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் அவர்கள் ஒரு நாள் தொலைபேசி மூலம் என்னை அழைத்தார். ஏதாவது வானெலி நிகழ்ச்சி சம்பந்தமாக இருக்கலாமென நான் எண்ணிய பொழுது 'பேராசிரியர் கைலாசபதி தன்னை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இன்று மாலை சந்திக்க முடியுமா என உங்களிடம் கேட்கச் சொன்னுர்' என்று ஐயர் அவர்கள் கூறினுர்கள்.

பேராசிரியர் அவர்களும் நானும் அதுவரை ஒருவரையொருவர் அறிமுகமாயிருக்கவில்லை யென்பதால் எதற்காக என்னைச் சந்திக்க விரும்புகிறுர் என நான் ஐயர் அவர்களிடம் கேட்ட போழுது அவர் எதுவும் குறிப்பிட்டுக் கூறவில்லை எனப் பதிலளித்தார். எதற்கும் அவர் குறிப்பிட்ட நேரத்துக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சென்று சுப்பிரமணிய ஐயர் அவர்களை விசாரித்தேன். அவர் கடமை முடிந்து போய்விட்டதாகத் தெரிந்தது முப்பது நாற்பது பேர் நிறைந்திருந்த கூட்டுத்தாபன வரவேற்பு மண்டபத்தில் இந்த நிலையில் நாம் இருவரும் எவ்வாறு ஒருவரையொருவர் சந்திக்கப் போகிறேம் என யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருந்த அவ்வேளையில் பட்டிக் சேட் அணிந்த சிவந்த மனிதர் ஒருவர் எனக்கு முன்னுல் வந்து என்னுடைய பெயரை விசாரித்தார். அவர் தான் பேராசிரியர் கைலாசபதி என அறிந்து கொண்டேன். 'எப்படி என்னை அடையாளங் கண்டு கொண்டீர்கள்' என்று கேட்டதற்கு 'ஐயர் அவர்கள் கூறிய விவரத்தைக் கொண்டு ஊகித்தேன்' என்ருர். அத்துடன் உடனடியாகவே விஷயத்திற்கு வந்து விட்டார். 'சமுத்திரா ஹோட்டலில் கைப்பணிக் கண்காட்சியொன்று நடைபெறுகிறது. அதைப் பார்த்து வானெலியில் 'கலைக் கோலம்' நிகழ்ச்சிக்கு விமர்சனம் ஒன்று எழுதுங்கள்' என்ருர் 'நான் வழமையாக சங்கீதம், நாட்டியம் போன்றவற்றுக்குத்தான் விமர்சனம் எழுதுவேன். இதில் பரிச்சயமில்லை' என்று நான் கூறியதும், 'நீங்கள் தான் இதை எழுத வேண்டுமென நான் விரும்புகிறேன். இது உங்களால் தான் முடியும்' என்று கூறி அழைப்பிதழையும் கையில் கொடுத்தார்.

அவர் கூறியதை மறுக்கமுடியாத நிலையிற் கண்காட்சியைப் பார்த்து விமர்சனம் எழுதிக் கொடுத்தேன். ஆறுபக்கங்களிலிருந்த அப்பிரதியை இடையிடையே படித்துப்பார்த்த அவர் திரும்ப ஒவ்வொரு பந்தியாகப் படித்தார். "இதை எத்தனை நிமிடங்களுக்கென எழுதியிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். "எட்டு நிமிடங்களுக்கு'' என்று நான் கூறியதும் இதில் எந்தப் பந்தியை விடுவதென்று தெரியவில்லை ஒன்றையும் விடமுடியாதமாதிரி எழுதியிருக்கிறீர்கள். உங்களுக்கு ஆறு நிமிடந்தான் ஒதுக்கி வைத்திருந்தேன். பரவாயில்லை வேறு நிகழ்ச்சியில் இரண்டு நிமிடங்களைக் குறைப்போம்'' என்று கூறி ஒலிப்பதிவு செய்தார். அன்று எனக்குத் தொண்டையில்லாததால் வேறெருவர் தான் அப்பிரதியை ஒலிப்பதிவிற்காகப் படித்தார். அதிற் பொதிந்துள்ள விஷயங்களை உணர்ச்சி பூர்வமாக அழுத்தங் குறைத்தும் கூட்டியும் வாசிக்கவேண்டிய இடங்களை வாசித்தவர் தவறவிட்ட பொழுதெல்லாம் ஏமாற்றமும் கவலையும் பேராசிரியர் அவர்களின் முகத்தில் தெரிந்தன. பல முறை திருப்பி ஒலிப்பதிவு செய்தும் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லையென்பதை இதை நீங்களே வாசித்திருந்தால் நன்ருய் இருந்திருக்கும்'' என அவர் எனக்குக் கூறியதிலிருந்து புரிந்து கொண்டேன் கலையுணர்வு ... வேண்டுமென்னும் பொறுப்புணர்வுமுள்ள பெரும் மனிதர் பேராசிரியர் கைலாசபதி அவர்கள்.


உ
சிவமயம்





**பெருந்தகையீர் மிக்க நன்றி!**

திருவருள் துணைகொண்டும், பெரியோர் ஆசியுடனும் இனிது நிறைவெய்திய எமது 'ரெலிகுளோப்' நிறுவன அங்குரார்ப்பண வைபவத்துக்கு வருகை தந்து நல்லாசி வழங்கிய நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம், அந்தணளர், ஆன்ருேர், வணிகப் பெருமக்கள், ஆதரவாளர்கள், ஒல்லும் வகையால் உதவியெலாம் புரிந்த நண்பர்கள் - அனைவர்க்கும், 'ரெலிகுளோப்' நிறுவனத்திற்கு கட்டடத்தை நியாயமான வாடகைக்குத் தந்துதவிய ஆர். ஜி. கட்டட உரிமையாளர், தொலைத்தொடர்புகளை ஏற்படுத்தித் தந்த அத்திணைக்கள உத்தியோகத்தர்கள், இரவு பகலாகப் பாடுபட்ட கொத்தனுர், ஓவியர், கைவினைஞர்கள் ஆகியோருக்கும் எனது நெஞ்சம் நெகிழ்ந்த பணிவான நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ம. சிவராசா

'ரெலிகுளோப்'
ஆர். ஜி கட்டடம், ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 15 - 2 - 86.


# திருவையாற்றில் தியாகராஜ உற்சவம்

**எஸ். கனகசபை**

கர்நாடக சங்கீதம் என்பது காவேரி நதிக்கும் கிருஷ்ணு நதிக்குமிடையிலுள்ள பிரதேசத்தில் காணப்படும் சங்கீதமாகும். கர்நாடக சங்கீதத்திற்கு தற்போதைய உருவத்தை கொடுத்தவர்களில் ஒருவரான தியாகராஜ சுவாமிகளுக்கு வருடா வருடம் உற்சவம் கொண்டாடப்படுகிறது. திருவையாற்றில் காவேரி நதிக்கரையில் வழமைபோல் அவருடைய சமாதியில் 139வது உற்சவம் நடைபெற்றது. விழாவின்போது இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் திருவையாற்றில் தெற்கத்திய கலாசார வலயத்தையும் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இவ்வலயம் தமிழ்நாடு, கேரள, பாண்டிச்சேரி, கர்நாடக, ஆந்திரா முதலிய பிரதேசங்களை உள்ளடக்கும்.

தியாகராஜ சுவாமிகள் சமாதி எய்திய காலம் தொட்டு (1847) அவருடைய குரு சிஷ்ய பரம்பரையினர் சமாதியில் பூஜை செய்தும் உமையாள்புரத்தில் சங்கீத ஆராதனை செய்தும் வந்தனர். கிருஷ்ண பாகவதரும் சுந்தர பாகவதரும் தமது இல்லத்திலேயே நடத்தினுர்கள். சமாதியிலேயே ஆராதனையும் உற்சவமும் நடைபெறும் சம்பிரதாயம்





1907 ஆம் ஆண்டு முதல் இடம் பெற்றது. இதனை ஒழுங்கு செய்தவர் பிரபல வயலின் வித்துவான் (கார்லஞ் சென்ற) மலைக்கோட்டை கோவிந்த சுவாமிபிள்ளை. சமாதியில் இட வசதியில்லாமையால் கச்சேரிகள் கல்யாணமகாலில் நடைபெற்றன. இக்குறையை நீக்குவதற்கு பங்களூர் நாகரத்தினம்மாள் தனது சேமிப்பை முதலீடு செய்து கோயில் கட்டும் திருப்பணியில் (1291) இறங்கினுர். இவரும் தியாகராஜ குரு சிஷ்ய பரம்பரையைசார்ந்தார். இனிய குரலும் நயத்துடன் பாடும் வல்லுநர். திருப்பணி 1925ம்ஆண்டு முடிந்தது. இன்றைக்கும் இக்கோவிலில் தான் ஆராதனை அபிஷேகம் பூசை முதலியன நடைபெறும். இதன் பின்னர் கச்சேரிகள் கோயிலுக்கு முன் கட்டப்பட்ட மண்டபத்தில் நடைபெறும். உற்சவம் தொடர்ந்து ஐந்து ஆறு நாட்கள் நடைபெறும். சம்பிரதாயப்படி ஆராதனையின் போது முதிய வித்துவான்கள் பஞ்சரட்ன கீர்த்தனைகளைப்பாடுவர். ஒருபெரிய வித்துவான் தலைமை தாங்குவார். சில ஆண்டுகளுக்கு முன் முசிறி செம்பை அரியகுடி செம்மங்குடி, முடிகொண்டான், ஜி. என். பி ஆகியோர் தலைமை தாங்கி கூட்டு பிரார்த்தனை செய்தார்கள். இவ்வருடம் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி தலைமையில் உற்சவம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான வித்துவான்கள் பங்குபற்றும் இவ்விழாவை ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கேட்டு மகிழ்வார்கள். திருச்சி வானெலி, நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்தும் ஒலிப்பதிவு செய்து பின் ஒலிபரப்பியும் அரிய சேவை புரியும்.

தியாகராஜ உற்சவம் போன்றே ஹிந்துஸ்தானி சங்கீத சிற்பி மியான் தான்சேனுக்கும் ஆண்டாண்டு மார்கழி மாதத்தில் கவாலியாரில் (கவாலியர்) உற்சவம் நடைபெறுகிறது. மியான் தான்சேன் சக்கரவர்த்தி அகபர் தர்பாரில் சமஸ்தான வித்துவான், அவருடைய குரு சிஷ்ய பரம்பரை 'சேனி' காரணுவை சார்ந்தவர்கள் இதனை நடத்துகிருர்கள்.


Drink anna COFFEE



நவா மினி (உஷா மினி முன்பாக)



MISSING IN ACTION - I, II
10.30, 12.30, 2.30, 4.30, 7.00, 9.30
() முதன் முதலாக ஒரிஜினல் பிரதியில
() (A) கண்டிப்பாக வயது வந்தவர்கட்கு மட்டும்.
() தடை செய்யப்பட்டது.


## புது ஜோக்ஸ்

பெரியவர்:- உண்மை பேசி உத்தமனுக வாழ வேண்டும் மகனே.

மகன்:- என்ன அப்பா உந்த 'லங்கா புவத்' மாதிரியோ!

*

ஒருவர்:- என்ன பாருங்கோ திடீரென்று மாடி வீடு கட்டுறியள்.

மற்றவர்:- அங்க பாதுகாப்பு வலயம் போட்டுட்டாங்களாம். சனங்களெல்லாம் இஞ்சால வந்திட்டுதுகள் இப்பிடிக் கட்டினுல் வாடகைக்கு விடலாம் எண்டு ஒரு யோசனை

*

முதலாளி:- நீ என்ன அந்தக் கடைப் பக்கமாய் ஒரு புது பிஸினஸ் துவங்கப் போறியாம்.

மற்றவர்:- பெட்டியள் தானே அப்பா இப்ப கூட பிஸ்னஸ் நடக்குது அதாலதான்.

— நல்லூரான் —


**மணமகள் தேவை**

யாழ். இந்து சைவ உயர்குல, மேற்கு ஜெர்மனியில் வேலைபார்த்த நற்சான்றிதழ் உடைய, 27 வயது உடைய, படித்த, அழகான, ஆரோக்கியமான மணமகனுக்கு அழகான, பொருத்தமான மணமகள் தேவை. ஜாதி, மதம் பார்க்கப்படமாட்டாது. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. விரும்பினுல் கடிதத்திலேயே பெற்ருேர்கள் விபரம், புகைப்படம், ஜோசியம் ஆகிய முழு விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 5, உதயன் மே. பா. 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.



சஞ்சீவியின் நாளிதழ் உதயன்



**தேவை**

வட பிராந்தியத்திலுள்ள தொழிற்சாலைக்குப் பயிற்சிப் பாதுகாவலர்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் 25. 2 86க்கு முன் கீழ்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: 6
மே.பா. உதயன் - சஞ்சீவி.
15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு யுத்த விளிம்பில் இலங்கை; தடுக்கும் முழுப் பொறுப்பும் ஜே. ஆரிடம்

தெற்கு ஆசிய மக்களிடையே காணப்படும் கசப்பான இன மோதல்களிலும் பார்க்க, அடக்க முடியாத ஒன்ருக இலங்கையில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையேயான மோதல்கள் உள்ளன.

கடந்த இரண்டு ஆண்டுகளாக உள்நாட்டு யுத்தம் ஒன்றின் விளிம்பில் இலங்கை இருந்து வருகிறது.

ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் உயிரிழந்து விட்டனர்.

அமைதிக்குப் பெயர் பெற்ற இலங்கையில் இன்று குழப்பம் தான் காணப்படுகின்றது; இரத்த ஆறு ஓடுகிறது. தமிழரின் தனி நாட்டுக் கோரிக்கைக்கும் இலங்கை அரசின் ஒற்றை ஆட்சி நிலைக்கும் இடையில் ஒரு தீர்வு காணுவதற்கு ராஜீவ் காந்தி எடுத்த முயற்சிகள் ஆறு மாதங்களுக்கு முன்னர் நம்பிக்கை அளித்தன.

இப்பொழுது அந்த நம்பிக்கை குறைந்து காணப்படுகிறது.

பேச்சுக்கள் முற்ருக முறிவடையாமல் இருக்க கொழும்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதில் இருந்து பிரச்சினை தொடங்கியது.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் பொது, வர்த்தகத் துறைகளில் தமிழ் இனம் குறிப்பிடத்தக்க அளவு முன்னணியில் நின்றது. அதன் பின்னர் பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் நன்மைகளைக் கவனிப்பதில் தான் கவனஞ் செலுத்தியது.

பாரபட்சம் காட்டப்படுவதாக தமிழர் நினைக்கத் தொடங்கினர். அதன் பின்னர் வந்த தலைமுறைகள் பிரிந்து செல்ல எண்ணினர்.

1983 இல் தென் இலங்கையில் தமிழர் படுகொலை செய்யப்பட்டனர். அதைத்தொடர்ந்து இரண்டு இனங்களுக் கிடையேயான வேற்றுமைகள் முற்றத் தொடங்கின.

கடந்த ஆண்டு தமிழர்கள் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்தனர்.

ஒன்று: தனி இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது: வசிக்கும் பிரதேசம், பாரம்பரியப் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகள் முன் வைக்கப்பட்ட பின்னர் மோதல் குறைவதாகக் காணப்படவில்லை.

பிரச்சினைக்கு ராணுவத் தீர்வு காணுவதில் இரு தரப்பிலும் அக்கறை காட்டப்படத் தொடங்கியது.

உறுதி அளித்து இருந்தது. யுத்த நிறுத்தம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

பேச்சுக்கள் மூலம் வரும் தீர்வு ஒன்றை ஏற்க தமிழர் தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். ஆனால் இலங்கை அரசு, ஏற்றுக் கொள்ளக்கூடிய யோசனைகளைச் சமர்ப்பிப்பதில் தயக்கம் காட்டியது.

பிரயோசனம் அற்ற பல பேச்சுக்களின் பின்னர் கடந்த நவம்பரில் மாகாண சுயாட்சி பற்றி

## 'லண்டன் டைம்'ஸில் ஆசிரியத் தலையங்கம்

தென் இந்தியத் தமிழர் மத்தியில் இலங்கைப் பிரச்சினை எதிரொலிக்கும் என்று கவலை கொண்ட பிரதமர் ராஜீவ் காந்தி சமாதானப் பேச்சுக்களைத் தொடக்க உதவினர்.

கொழும்பு அரசு அதிகாரப் பரவலாக்கலை உறுதி செய்தால் ஈழம் கோரிக்கையைக் கைவிடவும் யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளவும் தமிழர்களைத் தூண்ட முயற்சிப்பதாக இந்தியா

ஜனாதிபதி ஜெயவர்த்தன சொல்லத் தொடங்கினர். தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சரின் கீழ் மாகாண சபையை வழங்க ஜெயவர்த்தன முன் வந்தார்.

தமிழரைப் பொறுத்த மட்டில் இது போதுமானதாகத் தெரியவில்லை. தமிழர் மேலும் இரண்டு நிபந்தனைகளை வலியுறுத்தினர்.

ஒன்று: வடக்கு-கிழக்கு மாகாணங்கள் ஒன்ருக இணைக்கப்பட வேண்டும்.

இரண்டு: காணிக்குடியேற்றம், சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு சம்பந்தமான அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணம் சம்பந்தமான தமிழர் கோரிக்கை குறித்து இந்தியா ஆதரவு தெரிவிக்கவில்லை என்ருலும், மாகாணசபைக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை ஆதரித்தது.

பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்பதை இந்த யோசனை எண்ண வைக்கிறது.

செயலில் இதை அடையும் சாத்தியம் அண்மையில் இருப்பதாகத் தெரியவில்லை.

முட்டுக்கட்டையாக வரக் கூடாத ஒன்று, பிரச்சினைக்கு தீர்வு காணுவதற்கு தடையாக வந்துள்ளது துரதிர்ஷ்டவசமாகும்.

உத்தேச மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கும் திட்டம் எதையும் நிராகரிக்கக் கூடிய நிலையில் ஜெயவர்த்தன இருக்கிருர்.

தமிழருடன் அதிகாரங்களைப் பகிர்வதை சிங்களவர் எதிர்ப்பர் என்றும் ஜெயவர்த்தன நம்புகிருர்.

பேணிப் பாதுகாக்கப்படும் தனித்தன்மைக்கு இது பயமுறுத்தலாக இருக்கும் என்று சிங்களவர் கருதுவர் என்று ஜெயவர்த்தன கூறுகிருர்.

இந்த உணர்ச்சிகளுக்கு எதிராக எழுந்து நிற்கக் கூடிய தேசியத் தலைவனுக்குரிய வீரமும் தூரதிருஷ்டியும் இல்லாத

தமிழாக்கம்:
— எஸ். ஜி. —

வராக, எண்பது வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் ஜெயவர்த்தன தென்படுகிருர்.

ஆறு மாத கால முயற்சியின் பின்னர், திரு காந்தியின் ஆலோசகர்கள் ஒன்றைத் தெளிவாகக் கூறி விட்டனர்.

பேச்சுக்கள் மூலம் காணப்படும் தீர்வுக்கான ஆரம்ப நிபந்தனைகளை இலங்கை அரசு நிராகரித்தால், சமாதானப் பேச்சுக்களில் இருந்து இந்தியா விலகி விடும் என்பதே ஆலோசகர்களின் கூற்று.

இந்தியாவின் 4 கோடி தமிழர் மத்தியில் கணிசமான அளவு ஆதரவை திரு. காந்தி ஏற்கனவே இழந்து விட்டார்.

பிரதமரிஞல் தமிழ்ப் போராளிகள் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் நீதியானவை அல்ல என்று தென் இந்தியத் தமிழர் கருதுகின்றனர்.

சமாதானப் பேச்சுக்கள் முறிந்தால் ஏற்கனவே மோதும் இரண்டு இனங்களுக்கிடையான முரண்பாடுகள் மேலும் அதிகரிக்கும்.

இலகுவில் உள்நாட்டு யுத்தம் ஒன்றுக்கு இலங்கை பலியாகும்.

இலங்கையில்லெபனுன் மாதிரியான நிலை உருவாகியுள்ளதாக மக்கள் ஏற்கனவே பேசத் தொடங்கி விட்டனர்.

இந்திய எதிர்ப்புக்கு முரணுக, இலங்கையில் தமிழர் அதிகமாகக் கொல்லப்படுவதை எதிர்த்துத் தாக்குப் பிடிக்க முடியாத நிலை பிரதமர் காந்திக்கு ஏற்படும்.

இலங்கையைக் காப்பாற்ற 1986 ஜனவரி ஒரு கடைசி சந்தர்ப்பம்.

காப்பாற்றும் முழுப் பொறுப்பும் ஜனதிபதி ஜெயவர்த்தனவின் தோள்களில்தான் சுமத்தப்பட்டுள்ளது.

> லண்டன் டைம்ஸ் நாளிதழ் உலகப் புகழ் பெற்றது. அதில் வரும் ஆசிரிய தலையங்கங்கள் உலக அரங்கில் உன்னிப்பாக ஊன்றிப் படிக்கப்படுபவை.
>
> இலங்கை இனப் பிரச்சினை பற்றி அண்மையில் ஆசிரியர் தலையங்கம் ஒன்றை லண்டன் டைம்ஸ் எழுதியிருந்தது.
>
> 'இலங்கையின் பிரச்சினைக்குரிய மாதம்' என்ற தலைப்பில் ஜனவரியில் எழுதப்பட்ட அந்தத் தலையங்கம் இங்கு பிரசுரமாகிறது.

# தோல்வி என்ற வடுவைவிட வெற்றியில் பெற்ற வீரவடு

## கீர்த்திமிக்கது

★ திருச்செந்தூரன் ★

(இலக்கியக் காட்சிகள்)

போரை விரும்புவோர் யாருமில்லை. போர் கொடியது. போர் தீயது போர் விலக்கப்பட வேண்டியது. போரை உலகம் முழுவதுமே வெறுக்கின்றது. ஆனாலும், போர் ஓய்வின்றி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. போர் என்பது வீரயுகக் கற்பனையன்று. அது வாழ்க்கைத் தத்துவம்; தவிர்க்க முடியாத நிலை. போரை நாடி நாம் செல்லாவிட்டாலும் அது ஏதாவது ஓர் உருவில் நம்மை நாடி வரும். மனிதன் முதன்மையாக ஒரு விலங்கே. பிழைத்து வாழ்வதற்கான போராட்டம் (Struggle for Existence), தக்கன பிழைத்து வாழ்தல் (Survival of the fitrest) என்ற விலங்கியல் – உயிரியல் – தத்துவங்களே விலங்குப் பேரரசின் (Animal Kingdom) கொடுமுடியில் நிற்கும் மனிதனையும் ஆளுகின்றன; ஆட்டிப்படைக்கின்றன.

தாயகத்து மக்கள் போரை விரும்பவில்லை. வெறுத்தனர். அவர்கள் போரின்மையை – அமைதியைக் காதலித்தனர்; அவர்களுக்கு நாடு விரிவாக்கும் ஆசை இல்லை; நாடு பிடிக்கும் ஆசையும் இல்லை. அவர்கள் தாயக மண்ணை உயிரினும் மேலாக நேசித்தனர். தமது தாயகத்து மண்ணில் ஓர் அங்குலத்தைக் கூட அயல் வெறியரிடம் பறிகொடுக்க அவர்கள் தயாராக இல்லை.

எதிரிகள் எல்லைப் புறங்களில் தமது படைகளை ஊடுருவவிட்டுக் குழப்பம் செய்த போதெல்லாம் அவர்கள் தமது குலத்து மூத்தவர்களை எதிரிகளிடம் அனுப்பி அமைதி காக்க முயன்றுர்கள். இன்னு செய்யாமை என்ற அவர்களின் தத்துவத்தை எதிரிகள் அவர்களின் பலவீனமாகக் கருதிஞர்கள். எல்லைகளிலே ஓய்வில்லாமல் குழப்பம் நிகழ்ந்தது. எல்லைகளிலே எதிரிகள் பெருமளவில் குடி புகுந்தனர். எல்லையில் சமநிலை குழம்பியது. சிறு கலகங்கள் பெருங் கலகங்களாயின.

எல்லை கடந்த பொறுமையின் எல்லையைக் கடந்த தாயக மக்கள் போரைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைக்கு வந்தார்கள். கணப்போதில் கடல் போன்ற படை திரண்டது. தாயக வீரர் படையணிகள் எதிரியை முறியடிக்க அலையலையாகப் புறப்பட்டன.

எதிரிகள் பலம்மிக்கவர்கள். போர்தான் அவர்களுடைய தொழில், பொழுதுபோக்கு, விளையாட்டு எல்லாம். தாயகத்து வீரர்களோ இளைஞர்கள் திரம்பிய பயிற்சி பெற்றிருந்தாலும்போர்க்கள அநுபவம் இல்லாதவர்கள். அவர்களுடைய பால் வடியும் முகங்களை இன்று முழுவதும் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அத்துணை இளமை எழில் கனிந்த வீர அழகு.

அவர்கள் உடல்கள் உருண்டு திரண்டு அழகோடு தோன்றின.

இவர்களால் போரிட முடியுமா? இவர்கள் வெற்றி பெறுவார்களா? இவர்களுக்குப்போர்க்கள அநுபவம் இல்லையே. இவர்களுக்குப் போர்த் தந்திரங்கள் தெரியாதே. இவர்கள் எவ்வாறு போரிடப் போகிருர்கள்? என்ற ஐயம் மக்களிடையே நிலவியது. ஆனாலும், மக்கள் உற்சாகப்படுத்தித் தலைவனையும் வீரர்களையும் போர்க்களத்துக்கு அனுப்பி வைத்தனர்.

தாயகப்படை எதிரிப் படையுள் புயலெனப் புகுந்தது. தாயகப் படை புதிய புதிய உத்திகளோடு மூர்க்கமாகப் போரிட்டது. 'நேற்று வரை சாத்வீகம் பேசியவர்களா இவர்கள்; சூரனோடு போரிட்ட முருகன் போலல்லவா ஒவ்வொரு வீரனும் தோன்றுகிருன்' என்றெல்லாம்கண்டோர் வியந்தனர். எதிரிப்படை தாயகப்படைக்கு எதிர் நிற்க முடியாமற் பின் வாங்கியது. பின் வாங்கும் போதே தாக்கிக் கொண்டு ஓடியது. இதனால் தாயகப்படை பெரிதும் பாதிக்கப்பட்டது.

தாயக வீரர் சிலர் கண்களை இழந்தனர். சிலர் மார்பிலே வீரப் பதக்கம் போன்ற காயங்களைப் பெற்றனர். சிலர் தோளிலே எதிரிப்படையின் போர்க்கருவிகள் வாகு வலயம் வரைந்தன. சிலர் முகத்திலே வடுவைப் பெற்றனர். பலர் போர்க்களத்திலே இன்னுயிரீந்து வீர சுவர்க்கம் புகுந்தனர். தாயகத் தலைவனுகிய ஏனுதி திருக்கிள்ளியின் முகத்திலும் வீரத்தின் சின்னமாக அழியா வடுக்களைப் பெற்றுன். உடலிலே நிலையான வடுவைப் பெற்றுலும் தாயகத்துக்கு ஏற்பட இருந்த அடிமைத்தனம் என்ற வடுவை அவர்கள் துடைத்து விட்டனர்.

எதிரிப்படைகள் எவ்வித உடல் ஊனமுமின்றிப் பாதுகாப்பாகப் பின் வாங்கிச் சென்று விட்டார்கள். ஆனால், தோல்வி என்ற அழியா வடுவுடன் எதிரிகள் பின் வாங்கி விட்டார்கள்.

தாயகப்படை வெற்றி முழக்கத்தோடு திரும்பியது. மக்கள் அவர்களை வரவேற்கத் திரண்டனர். படை முழக்கத்தைத் தொலைவிலே கேட்டது முதலே அவர்கள் மகிழ்ச்சியோடு ஆரவாரித்தனர். படை கண்ணுக்கு எட்டிய தூரத்தில் வந்து விட்டது. தாயக மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் திடீரெனத் தடைப்பட்டது. தாயக வீரர் தாயக விடுதலைக்காகக்கொடுத்த விலையைக் கண்டபோது அவர்கள் அதிர்ந்தனர். வீரர்களின் அழகு எங்கே? வீரர்களின் உறுப்புக்கள் எங்கே? எதிரிகளின் கொடுமையை அவர்கள் அப்போதுதான் உணர்ந்தனர். தாயகத்து வீரர்களின் துன்பத்தைத் துடைத்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய மக்கள் விரைந்தனர்.

இந்தக் காட்சிகளைக் கற்பனையிலும் நேரிலும் கண்டவர்களுள் ஒருவர் கோனுட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனுர். அவர் எதிரிகளின் தோற்றத்தையும் தாயக வீரர் தலைவன் ஏனுதி திருக்குள்ளியின் தோற்றத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தார். கிள்ளியின் உடலெங்கும் வாளினுல் ஏற்பட்ட வடுக்கள் வாழ்ந்து கொண்டிருந்தன. இந்தக் காட்சி கண்ணுக்கு இனிமையில்லாததாக இருந்தது. ஆனுல், கிள்ளியின் பெரும் புகழோ கேட்பதற்கு இனிதாக இருந்தது. புறங்காட்டி ஓடிய எதிரிகளின் தலைவனது உடலோ காயம் எதுவுமின்றிக் காட்சிக்கு இனியதாக இருந்தது. அவர்களது புகழோ கேட்பதற்கு இனியதாக அமையவில்லை. திருக்கிள்ளி ஒரு வகையிலே இனியவனுக இருந்தான். எதிரிகளோ இன்னெரு வகையிலே இனியவராக இருந்தனர்.

இவ்வாறு தாயக வீரர்களின் தலைவனுன திருக்கிள்ளியின் புகழையும் எதிரிகளின் இகழையும் ஒப்பிட்டு முறையிலே கூறி அவனை உலகம்...

(7-ம் பக்கம் பார்க்க)

# சீன சிறுபான்மை இன மக்கள் தாமே சட்டங்களை ஆக்குகின்றனர்

**பீக்கிங் வானெலியில் பல ஆண்டுகள் பணியாற்றிய திரு. வீ. சின்னத்தம்பி தமது செவ்வியில் கூறுகிருர்.**

பீக்கிங் வானெலியின் தமிழ்ப்பிரிவில் 16 ஆண்டு காலம் பணியாற்றியவர் திரு. வீ. சின்னத்தம்பி.

"சீனவில்தான் எனது வாழ்க்கைத் துணைவியாணியை நான் சந்தித்தேன். அவரும் அங்கு அயல் மொழிப் பதிப்பகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். எமது திருமணமும் சீனவிலேயே நடைபெற்றது.

எங்கள் பிள்ளைகளும் சீனவில்தான் பிறந்தார்கள்.

ஆகவே சீனவுடனுன எமது உறவும் உணர்வும் மிகவும் ஆழமானவை" எனக்கூறும் திரு. சின்னத்தம்பியிடம் சீன பற்றிய சில விடயங்களைக்கேட்டு 'சஞ்சீவி' வாசகர்களுக்குத் தருகிறேம்.

✶ மக்கள் சீனவிலுள்ள பிரதான சிறுபான்மை இனங்கள் எவை?

சீனவில் 55 சிறுபான்மைத் தேசிய இனங்கள் இருக்கின்றன. சீன மக்களின் தொகையில் அவர்கள் ஆறு வீதமாய் விளங்குகின்றனர். இவ் இனங்களில் மொங்கோலிய, குவேய், திபேத், உய்கூல், மியௌ, யி, சுவாங், பூயி, கொரிய, மஞ்சு இனங்கள் ஒவ்வொன்றும் பத்து லட்சத்துக்கும் மேலான ஜனத்தொகையுடையவை. ஏனைய இனங்களில் ஒரு சில ஆயிரம் மக்களே உள்ளனர்.

சீன சிறுபான்மைத் தேசிய இனத்தவர் சீனப் பிரதேசத்தில் 50 — 60 வீதத்தில் பரந்து வாழ்கின்றனர். ஏனைய பகுதிகளில் செறிந்து வாழ்கின்றனர்.

✶ சீன யாப்பிலும் நடைமுறையிலும் அவர்களுக்கு எவ்வித பாதுகாப்புகள் வகுக்கப்பட்டுள்ளன?

சீன யாப்பின்படி சிறுபான்மைத் தேசிய இனங்கள் செறிந்து காணப்படும் பிரதேசங்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கப்பட்டிருக்கிறது.

சீனவில் இத்தகைய ஐந்து சுயாட்சி மாகாணங்கள் உள்ளன. மொங்கோலியா, நிங்சியா, [illegible] குவாங்சி என்பனவே [illegible]. இவற்றுடன் 29 சுயாட்சி நிர்வாகப் பிரதேசங்களும் 69 சுயாட்சிக் கவுண்டிகளும் இருக்கின்றன. இவற்றை இலங்கையில் மலையகத்திற்கு ஒப்பிடலாம். இந்த சுயாட்சிப் பிரதேசங்கள் அனைத்தும் சீன மக்கள் குடியரசிலிருந்து பிரிக்கப்பட முடியாதவை.

இவை உள்ளூர் நிதிகளைத் தாமே நிர்வகிக்கும் உரிமை உடையவை. அத்துடன் தமது சொந்த இனங்களின் அரசியல், பொருளாதார, கலாசார இயல்புகளுக்கு இணைந்த சட்டங்களையும் விதிகளையும் வகுக்கின்றன.

சீனவின் பிறபாகங்களில் வாழும் சிறுபான்மை இன மக்கள் பெரும்பான்லமை 'ஹான்' (HAN மொழி பேசுவோர்) இன மக்கள் அனுபவிக்கும் அதே ஜனநாயக உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர்.

✶ மக்கள் சீன மலர்வதற்கு முன்னர் இச் சிறுபான்மையினரின்நிலைமை எவ்வாறு இருந்தது?

ம. சீ. மலர்வதற்கு முன் சீனவின் சிறுபான்மை தேசிய இனங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளால் அடக்கி ஒடுக்கப்பட்டு சுரண்டப்பட்டன. இதனுல் அவர்களது மக்கள் தொகை குறைந்து சென்றது.

இந்த நூற்ருண்டின் முப்பதாம் ஆண்டுகளில் 'குயே' இன மக்களையும், 'மியௌ', 'யௌ' இன மக்களையும் பிற்போக்கான யுத்தப் பிரபுக்கள் படுவதை செய்தார்கள்.

நாற்பதாம் ஆண்டுகளில் பிற்போக்கு வாத கொமிந்தாங் (கூட்டு) அரசாங்கம் மொங்கோலிய இனத்தவரையும் படுவதை செய்ததுடன் உய்கூங், கசாக் மற்றும் இனங்களைச் சேர்ந்த மக்களை அடக்கி ஒடுக்கியது. இதில் ஆயிரக்கணக்கானேர் கொல்லப்பட்டனர்.

யப்பானிய ஏகாதிபத்திய வாதிகள் சீனவுக்குள் படையெடுத்தபோதுவடகிழக்கிலுள்ள'ஹோச்சே' இன மக்களைப் படுவதை செய்தனர்.

திபேத்தில் மிருகத்தனமான அடிமைச் சொந்தக்காரர் ஆட்சியின் கீழ் ஒரு நூற்ருண்டில் திபேத் மக்களின் தொகை அறுபது வீதம் குறைந்தது.

### சிறுபான்மையோர் விடுதலை

ஏகாதிபத்தியம், உள்ளூர் முதலாளித்துவம், நில பிரபுத்துவம் ஆகியவற்றுக்கு எதிராக பெரும்பான்மை 'ஹான்' இன மக்களுடன் சேர்ந்து ஒருமித்த புரட்சிப் போராட்டத்தை நடத்தியே, சீன சிறுபான்மை இனங்கள் விடுதலை பெற்றன.

✶ சீன சிறுபான்மையினரின் மொழி, கல்வி, கலாசாரம் ஆகியவற்றை வளர்க்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் எவை?

தமது சொந்தமான பேச்சு, எழுத்து, மொழிகளைப் பாவிக்கும் சுதந்திரம் சகல தேசிய இனங்களுக்கும் உண்டு என்று சீன மக்கள் குடியரசின் யாப்பு கூறுகின்றது.

அங்குள்ள இனங்கள் மத்தியில் சமத்துவம் ஏற்பட்டுள்ளதனுல் சுய விருப்பம், வேலைவாய்ப்பு போன்ற காரணிகளால் ஓர் இனத்தவர் வேறு இனத்தவரின் மொழியைக் கற்கிருர்கள்.

✶ சிறுபான்மையினரின் மதங்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளதா?

மத நம்பிக்கைச் சுதந்திரமும், மத நம்பிக்கையின்மைச் சுதந்திரத்துடன் நாஸ்திகத்தைப் பிரசாரம் செய்யும் சுதந்திரமும் ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு என சீன யாப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மை ஹான் இன மக்களைப் போலவே சிறுபான்மை இன மக்களும் இந்த உரிமையை அனுபவிக்கிருர்கள்.

பழைய சீனத்தில் சிறுபான்மைத் தேசிய இனங்களைச் சேர்ந்த சுரண்டும் வர்க்கங்கள் உழைப்பாளி மக்களை அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்த மதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தின.

ஏகாதிபத்தியம் அதன் ஆக்கிரமிப்பின் ஒரு ஆயுதமாக மதத்தைப் பயன்படுத்தியது.

சில தேசிய இனமக்கள் குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சேர நிர்ப்பந்திக்கப்பட்டார்கள், திபேத்தியர், மொங்கோலியர்களின் புத்திரர்களைக் கட்டாயத்தின் பேரில் கோயிலுக்கு அனுப்பி 'லாமா'க்களாக்கப்பட்டனர்.

சீனவில் மதசுதந்திரம் இருக்கிறது. அதே வேளை மதம் சார்பான நிலபிரபுத்துவ சலுகைகளும் அடக்கு முறைகளும் சுரண்டலும் அழித்தொழிக்கப்பட்டுள்ளன.

✶ மாக்சிஸ – லெனினிச சித்தாந்தங்களுக்கு முரணுன செயற்பாடுகள் சீனவில் தலைதூக்கியுள்ளன எனப்படுவது பற்றி...?

மாசேதுங் உருவாக்கிய மக்கள் சீன உலகப் பாட்டாளி வர்க்க புரட்சியின் ஓர் அங்கமாக விளங்கியது.

உள்நாட்டில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஸ்திரப்படுத்தி உலகரீதியில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு வழிகோலுவதன் மூலம் முழு உலகிலும் இருந்து மனிதனை மனிதன் சுரண்டும் சமுதாய அமைப்பை இல்லாது ஒழிப்பதே மாசேதுங் சீனவின் கொள்கையாக இருந்தது.

ஆனல் தெங் சியௌபிங் தலைமையிலான இன்றைய சீனவில், சோஷலிசப்புரட்சியிலும் சோஷலிச நிர்மாணத்திலும் மாசேதுங் முன்வைத்துப் பரப்பிய புரட்சிக் கொள்கைகள் காற்ருேடு காற்ருக பறக்கவிடப்பட்டுள்ளன.

சீன விவசாயம், சோஷலிசப் பாதையில் முன்னேறிச் செல்வதற்காக மாசேதுங் முன்வைத்த மக்கள் 'கம்யூன்' என்ற மகத்தான கூட்டுப் பொருளாதார அமைப்பை இன்றைய ஆட்சியாளர் இல்லாது ஒழித்துள்ளனர். அதே வேளை தனியார் விவசாய

[ 7ஆம் பக்கம் பார்க்க ]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் - 4

### இரு மாத குறுநாவல்

# சிறகுப் பறவைகள்

து. வைத்திலிங்கம்



ஆண் பெண் இருபாலாரும் கல்வி கற்ற அந்தப் பாடசாலை கிராமத்தின் மையத்தில் இருந்தது.

ஆரம்ப வகுப்பு முதல் கடைசிவரை சிவனேசனும் திலகமும் ஒன்றாகச் சேர்ந்தே படிக்கும் வாய்ப்பு இருந்தது.

சிவனேசன் மிக நன்றாகப் பாடுவான். நல்ல குரல் வளம்.

ஏழாம் வகுப்பில் என்று ஞாபகம். ஏதோ ஒரு தவணைப் பரீட்சை. சங்கீத ஆசிரியர் சந்திரசேகரம் ஒவ்வொருவரையும் அழைத்து பாடச்சொல்லி புள்ளிகள் போட்டுக் கொண்டிருக்கின்றார்.

சிவனேசனது முறை வருகிறது.

'சொப்பன வாழ்வில் மகிழ்ந்து...'

தியாகராஜ பாகவதரது பாடல் மிகக் கம்பீரமான ஒலியில் காற்றுடன் தவழ்கிறது.

அந்த வகுப்பே அமைதியாகிறது.

அந்த வகுப்பு மட்டுமா?

அடுத்த வகுப்பு மாணவ, மாணவிகள் சிலர் எட்டி நின்று பார்க்கின்றனர்.

பாட்டு முடிந்ததும் சந்திரசேகரம் ஆசிரியர் எழுந்தார். சிவனேசனை அப்படியே அவனது இரு தோள்களிலும் கையைப் போட்டு அணைக்கின்றார்.

தம்பி! என்ன குரலடா உனக்கு...

சங்கீதத்தை ஒரு நாளும் கைவிட்டு விடாதை!

அவரது குரல் தளதளத்தது. உணர்ச்சியில், அவனுக்கு நூற்றுக்கு நூறு புள்ளிகள்!

வெள்ளிக் கிழமைகளில் காலை நேரப் பிரார்த்தனையில் சிவனேசன் பண்ணிசை பாடுவான்.

'காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி...'

இந்தத் தேவாரம் பாடும்போது, திலகம் கண்களை மூடிக்கொண்டு கேட்டுக் கொண்டிருப்பாள்.

அவளது கன்னக் கதுப்புகளில் மெல்லென வடியும் ஒரு கண்ணீர் துளி.

யாரும் அறியாமல் அவளது கை அதை மெல்லத் துடைத்து எறியும்.

பின் ஏனோ தெரியாது, அவளையும் அறியாது ஒரு வித நாணத்துடன் சாம்பி நிற்பாள்.

இது அவளுக்கே புரிந்திருக்காத ஓர் உணர்ச்சிக் கலவை!

ஒரு முறை பாடசாலை ஸ்தாபகர் விழா விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

சங்கீத ஆசிரியர் சந்திரசேகரம் ஒரு புராண நாடகத்தை ஒழுங்கு செய்தார்.

சுந்தரமூர்த்தி நாயனார் கதையைத் தேர்ந்தெடுத்தார்.

நல்ல குரல் வளமும் முகப்பொலிவும் கொண்ட சிவனேசன் சுந்தரமூர்த்தி நாயனாராகவும் பாடசாலையில் வயது வந்த பிள்ளைகளிலேயே மிக அழகியான திலகம் பரவையாராகவும் நடிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முதலில் திலகம் நடிப்பதற்கு மிகவும் கூச்சப்பட்டாள்.

'நீர் ஆகத்தான் கூச்சப்படுகிறீர்! பயப்படாமல் நடியும்!'

சிவனேசன் உற்சாகமூட்டினான்.

சந்திரசேகரம் ஆசிரியர் இவளது கூச்சத்தைப் போக்கடிக்க பெரும் பாடுபட்டார்.

'எடி திலகம் வெருண்டடிக்காமல் நடிக்கப் பழகு!

நாடகத்தைக் குட்டிச் சுவராக்கி விடாதை!

இப்படிக்கூறி வெகு கவனமாக நாடகத்தை இயக்கினார். நாடகம் எதிர்பார்த்ததை விட மிகச் சிறப்பாக நடந்தேறியது இருவரது நடிப்பையும் சகலரும் பாராட்டினர்.

அதற்குப் பின்பு இருவருக்கும் பாடசாலையில் மாணவ மாணவியர்களிடையில் நல்ல செல்வாக்கு

'பரவை நாச்சியார் வாறு...'

மாணவர்களது கேலிக் குறிப்புகள் திலகத்தை வெட்கத்தினால் தலை குனிய வைக்கும்.

அப்பாடசாலையில் இருந்தது மிகச்சிறிய நூலகம் ஒன்றுதான். திலகம் தன் பொழுதை அனேக புத்தகங்கள் வாசிப்பதிலேயே செலவழிப்பாள்.

ஒரு நாள் அவள் ஏதோ ஒரு புத்தகத்தை தேடிக் கொண்டிருந்தாள்.

'நானும் கனநேரமாய் பார்க்கிறன்! அப்படி என்ன தேடுகிறீர்? வலியப் பேச்சுக்குஇழுத்தான் சிவனேசன்.

திலகம் பேச்சை வளர்க்க விரும்புவதில்லை. சக மாணவர்களது கண்கள் தங்களையே மொய்ப்பதை அவள் உணர்ந்து கொண்டாள்.

சிரித்துவிட்டு பதிலிறுக்காது நின்றாள்.

'யாரும் கேள்வி கேட்டால் மறுமொழி சொல்லக்கூடாது என்று அப்பா அம்மா சொல்லி விட்டவையோ...?' சிவனேசன் குறும்பு தவழக் கேட்டான்.

'சீ...!அப்படிஇல்லை...!' அவசரமாகக் கூறினான் திலகம்.

'என்ன புத்தகம் தேடுகிறீர்?'

மீண்டும் சிவனேசன்

'டாக்டர் மு. வ. வின் அகல் விளக்கு'

'அது இங்கு கிடையாது! நீர் இரண்டு நாள் பொறும். நான் கொண்டு வந்து தாறன்.'

'வேண்டாம் வேண்டாம்! நான் சும்மா... ஒருக்கா பார்க்கலாம் எண்டு...'

திலகம் அவசரமாக மறுத்தாள்.

'பரவாயில்லை நானல்லோ கொண்டு வந்து தாறன் நீர் வாசியும்'

அதற்குள் பல ஒலிகள் அங்கு எழுந்தன.

'உஸ்! உஸ்! ஆ! ஆ!'

சில்லறை விஷமத்தோடு கூடிய சக மாணவர்களது சீட்டி ஒலிகள் மெதுவாக எழுந்தன.

'அங்கை என்ன சத்தம்...?'

லைபிரரியன் பொன்னம்பலம் ஒரு பழைய ஆள். சோடாப்புட்டி கண்ணாடிக்குள்ளால் இங்கு பார்வையைச் செலுத்தினர்.

திலகம் மிரண்டு விட்டாள்.

அவளுக்கு காதுகள் குப்பென்று அடைக்க அங்கிருந்து விரைவாக வெளியேறி தனது வகுப்புக்குச் சென்று விட்டாள்.

அது நடந்து இரண்டு நாட்களின் பின் பாடசாலை தொடங்கு முன் சிவனேசன் திலகம் தேடிய 'அகல் விளக்கு' புத்தகத்தை அவளிடம் நீட்டினான்.

'படிச்சுப்போட்டு ஒரு கிழமைக்குப் பின்பு தாரும்!'

திலகம் முதலில் அதை வேண்டவில்லை.

'இதென்ன வீண் வேலை! நான் சும்மா தேடிப் பார்த்தனான்...... நீங்கள்......

'பரவாயில்லை. இது பொது நூலகத்திலிருந்து எடுத்து வந்தனான். நீர் கொண்டு போம்'

அவன் புத்தகத்தை நீட்டியபடியே நின்றிருந்தான்.

வேறு வழியின்றி திலகம் புத்தகத்தைப் பெற்றுக் கொண்டாள்.

ஆனால் இதைத் தொடர்ந்து, சிவனேசன் பல முறை வெவ்வேறு புத்தகங்களை பொது நூலகத்திலிருந்து எடுத்து வந்து திலகத்திற்குக் கொடுத்தான்.

திலகம் மிரண்டடிக்கவில்லை.

சிவனேசனுக்கு இது மிகவும் விருப்பமானதொரு காரியமாய் இருந்தது.

ஒரு நாள் புத்தகமொன்றைக் கொடுக்கும் போது அவனது செய்கையில் சிறிது தயக்கமிருந்தது.

திலகத்திற்கு அது ஒரு புதுமையாய் இருந்தது.

'திலகம்... ஒரு கடிதம் இருக்கிறது படித்துப் பாரும்!

சிவனேசன் சற்றுத் தயங்கியே இதைத் கூறினான்.

'கடிதமா?'

திலகம் விழித்தாள்.

ஓமோம்! புத்தகத்துக்குள் இருக்கிறது. வீட்டை கொண்டு போய் படிச்சுப்பாரும்.'

அவன் இதைக் கூறிவிட்டு சடாரென்று அப்பால் போய் விட்டான்.

வகுப்புக்குச் சென்ற திலகம் முள்ளில் மேல் இருப்பது போல் அமர்ந்திருந்தாள்.

வீட்டுக்குச் சென்ற திலகம் இரகசியமாகக் கடிதத்தைப் படித்துப் பார்த்தாள்.

'திலகம், நான் உன்னை மனமாரநேசிக்கின்றேன். படிப்பு முடிந்து எமக்கென்று ஒரு வாழ்க்கையை அமைக்கும் போது உன் நெஞ்சில் என்னை இடம் பெறச் செய்வாயா......'

இந்த ரீதியில் சிவனேசன் நீண்டதொரு காதல் கடிதம் எழுதியிருந்தான்.

அவளுக்கு ஒரே பிரமிப்பாய் இருந்தது. அத்துடன் பயமாயும் இருந்தது.

அடுக்களைக்குச் சென்று யாருமறியாமல் அந்தக் கடிதத்தை எரித்து விட்டாள்.

அடுத்த நாள் பாடசாலை ஆரம்பமாகுமுன் சிவனேசன் அவளைக் கண்டு விட்டான்.

'திலகம்'

அழைத்தபடியே ஆவலோடு அருகில் வந்தான்.

'கடிதம் படித்தீரா'

திலகம் மௌனமாய் நின்றாள்.

'கோபமா?'

மிகவும் பரிதாபமாய்க் கேட்டான்.

மீண்டும் திலகம் பதில் கூறாமல் மௌனம் சாதித்தாள்.

ஒன்றும் கதையாமல் நிற்கிறீரே! என்ன யோசனை...?'

சிவனேசன் ஆவலோடு கேட்டான்.

'தயவு செய்து என்னைக் குழப்பாதீர்கள்! நான் இதுவரை அந்த விஷயங்களைப்பற்றி ஒன்றுமே யோசிக்கவில்லை. தயவு செய்து இனி இப்படிக் கடிதம் தர வேண்டாம்! நான் படிக்கவேணும்...!

திலகம் பதில் கூறிவிட்டு, புத்தகங்களை தன் நெஞ்சோடு அணைத்த படியே சென்று விட்டாள்.

பேயறைந்தவன்போல் சிவனேசன் திலகம் சென்ற திக்கையே பார்த்துக் கொண்டு நின்றான்.

இச் சம்பவத்துக்குப் பின்பு சிவனேசன் புத்தகங்கள் கொடுப்பது நின்று விட்டது.

திலகமும் முன்பு போல் சிரிப்பது இல்லை. சிவனேசனது வழமையான உற்சாகம் மறைந்து விட்டது.

திலகம் பாடசாலையை விட்டு விலக முன்னரே சிவனேசன் வேறு பெரிய கல்லூரி ஒன்றுக்குக் கல்வி கற்கச் சென்று விட்டான்.

திலகம் இந் நிகழ்ச்சியை மறக்க முயன்றும் பல நாட்கள் முடியவில்லை. சிவனேசனது சிரித்த முகமும், அவள் அளித்த பதிலை கண்ட அவனது முகம் கறுத்ததையும் அவளால் மறக்க முடியவில்லை.

* * *

அன்று அமாவாசை தினம்.

கனகசபை அமாவாசை விரதம் அனுட்டிக்கும் வழக்கமுடையவர். பூரணத்துக்கு உடம்பு சரியில்லை என்று அடுக்களையில் ஒரு மூலையில் முடங்கிக் கொண்டிருந்தாள்.

திலகம் ஒண்டியாகவே மதியச் சமையலுக்கான காரியங்களைச் செய்து கொண்டிருந்தாள். பூரணம், மகள் அலசரம் அவசரமாகச் சமைத்துக் கொண்டிருப்பதைக் கண்டவள் 'சரசு சரசு' என்று கூப்பிட்டாள்.

சரசு தன் அறையில் ஏதோ மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அசையவில்லை.

'இவளுக்கு என்ன காது அடைச்சுப் போட்டுதோ! எடி சரசு...'

'நீங்கள் கொஞ்சம் கத்தாமல் சும்மா இருங்கோ' திலகம் கூறினாள்.

'மற்ற நாட்களிலை கந் (7 ஆம் பக்கம் பார்க்க)

# நீரிழிவு: இது ஒரு பரம்பரை வியாதி

நீரிழிவு நோயுள்ள (சலரோக நோயுள்ள) தாய்மார் தங்களுடைய நோயைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொண்ட பின்னரேயே கருத்தரிக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிடில் பிறக்கும் குழந்தைகள் அங்கவீனர்களாகவோ அல்லது நரம்புத் தளர்ச்சியுடையவர்களாகவோ பிறக்கலாம்.

இன்றைய மருத்துவ உலகின் விஞ்ஞான முறைக் கண்டுபிடிப்புக்களால் நீரிழிவுநோய் மூலம் இறக்கும் நோயாளரின் இறப்பு வீதம் குறைந்து வருகிறது.

மாரடைப்பு, பாரிசவாதம், நடக்கும்போது கால்களில் நோகுதல், கண்பார்வை பாதித்தல் – இவை போன்ற காரணிகளே நீரிழிவு நோயின் அறிகுறிகளாகும். இவற்றைக் கண்டதும் வைத்தியசாலைக்குச் சென்று இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

இரத்தத்தில் சீனியின் அளவு 180 மில்லிகிராம் ஆக இருக்க வேண்டும். அதனைவிட சீனியின் அளவு அதிகரித்தால் அவர் நீரிழிவு நோயாளி எனக் கூறலாம். சிலருடைய சிறுநீரைச் சோதிக்கும்போது சிறுநீரில் சீனி இருக்கலாம். ஆனால் அவருடைய இரத்தத்தில் சீனியின் அளவு குறைவாக இருக்கும். இரத்தத்தில் சீனி இல்லையெனில் அவர் நீரிழிவு நோயாளியல்ல.

நீரிழிவு நோய் ஒரு பரம்பரை நோயாகும். எமது தாய் அல்லது தகப்பன் அல்லது பேரன் பேர்த்திக்கு இந்நோய் இருந்தால் அது எமக்குப் பீடிக்கக்கூடும்.

சில நீரிழிவு நோயாளிகளுக்கு புண் ஏற்பட்டால் மாறுகின்றது. சிலருக்கு மாறுவதில்லை. இதன் காரணம் மனித வர்க்கத்தில் பலவிதமான நீரிழிவு நோயாளிகள் உண்டு என்பதேயாகும்

ஈரலில் இருக்கும் 'இலங்ககான் சிறுதீவுகள்' என்ற அமைப்புகள் — செயல் இழப்பதே இந்நோய்க்கு காரணம்.

இந்த அமைப்பு 'இன்சுலின்' என்ற ஒருவகை ஓமோனைச் சுரக்கிறது. இதுவே இரத்தத்தில்

## பெண்கள் இந்நோய் கண்டிருந்தால் தாய்மை அடைதல் தகாது

சீனியின் அளவைக் கட்டுப்படுத்தும் காரணியாகும்.

இலங்ககான்சிறுதீவுகள் செயலிழப்பதால் இன்சுலின் தயாரிப்பு இல்லாது போகிறது. இதனால்இரத்தத்தில் சீனியின் அளவு கூடி அது சிறுநீருடன் விரயமாகிறது. இதுவே சீனிச்சத்து தொடர்ந்து இழக்கப்படுவதற்கு காரணமாகும்.

இந்தக் காரணத்தினால் தான் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேறு விலங்குகளில் இருந்து பெறப்பட்ட இன்சுலினை செயற்கை முறையாக ஊசி மூலம் அடிக்கடி செலுத்தி வருகிறார்கள்.

இத்தகைய நோயுள்ளவர்கள் மரக்கறிவகை

## வைத்திய சஞ்சீவி

களை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். கீரை வகைகள், பச்சையிலைத் தாவரங்களை அதிகமாக உட்கொள்ளலாம். மரக்கறிவகைகளில் நார்த்தன்மை உண்டு. அவ்வாறான பொருள்கள் ஜீரணிப்பதற்கு அதிக நேரமெடுக்கின்றன. அவையே நீரிழிவு நோயாளிக்கு ஏற்றது.

இவர்கள் தமதுணவில் அதிக மரக்கறி, கீரை வகை சேர்த்துக் கொள்வதன் மூலம் தங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்ப் பாதிப்பை தாமதப்படுத்த முடியும்.

இந்த நோய்க்கு ஆளானவர்கள் சிவப்பு அரிசி அதாவது தீட்டாத அரிசிச் சோறு சாப்பிட வேண்டும். தவிடு நிறைந்த அரிசியே ஏற்றது. இது ஜீரணமடைய அதிக நேரமெடுக்கும்.

பாண் சாப்பிடுதல் கூடாது அரிசியைவிட பாணில் மாப்பொருள் அதிகமுண்டு. அத்துடன் ஒருவர் சோறு உண்ணும் போது மரக்கறிவகைகளை அதிகம் சேர்த்துக் கொள்வார். பாண் உண்பவர் மாஜரின், பட்டர், சீனி போன்றவற்றையே சேர்த்துக் கொள்வார். ஆகையினாலேயே பாண் நீரிழிவு நோயாளிக்குக் கூடாது,

குரக்கன், வரகு, காமை, தினை என்பன சமிபாடடைவதற்கு அதிக நேரம் எடுக்கின்றன. அதனால் இவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

நீரிழிவு நோயாளி ஒருவர் கிழமைக்கு இரண்டு முட்டையையே உணவில் சேர்த்துக் கொள்ளலாம். முட்டை உண்ண விரும்புகிறவர்கள் முட்டையின் மஞ்சட் கருவை விடுத்து வெள்ளைக்கருவையே எடுத்துக் கொள்ளுதல் நல்லது.

இந்நோயாளி எக்காரணம் கொண்டும் புரத உணவுகளை உட்கொள்ளக் கூடாது. அவர் மீன், இறைச்சி என்பவற்றை விடுத்து பயற்றங்காய், வெண்டிக்காய், போஞ்சி ஆகியவற்றை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்வது நலம்.

கிழங்கு வகைகள் ஓரளவுக்கு சேர்த்துக் கொள்ளலாம். உருளைக்கிழங்கு அதிகம் கெடுதி விளைவிக்காது.

பழவகைகளில் ஏற்றது பப்பாசிப்பழம் மட்டுமேயாகும். திராட்சைப் பழம் மிகவும் கெடுதி விளைவிக்கும். அதில் சீனிச்சத்து அதிகம்.

சீனி, சர்க்கரை, பனங்கட்டி, கருப்பட்டி, தேன், கற்கண்டு போன்ற எந்த விதமான இனிப்புக்களையும் நீரிழிவு நோயாளி கிட்டவும் எடுக்காமல் தவிர்ப்பது நல்லது.

சலரோக நோயாளி ஏதாவது ஒரு விசேட நிகழ்ச்சியின் போது ஐஸ்கிரீம் சாப்பிட விரும்பினால் அவர் கட்டாயமாக சோறு, மரக்கறி சாப்பிட்ட பின்னரே சிறிதளவு ஐஸ்கிரீம் சாப்பிடலாம். கூடியவரை தவிர்த்துக் கொள்ளுதல் நலம்.

[illegible] குடிக்கக் கூடாது பாலி[illegible] தன்மை எமது உடலின் இரத்த நாளங்களை அடைக்கக் கூடிய கொழுப்புத் திரள்களை ஏற்படுத்தும். அதனால் சில பகுதிகளுக்கு இரத்தம் செல்வது தடை செய்யப்படும். பாரிசவாதம் போன்ற பிற நோய்கள் ஏற்படலாம். ஆகையால் பால் குடிக்க விரும்பும் போது ஆடை நீக்கிய பால் மாவை அருந்தலாம்.

இந்நோயாளிகள் நல்லெண்ணெய், சூரியகாந்தி எண்ணெய் போன்றவற்றை பாவனைக்குச் சேர்த்துக் கொள்ளலாம் தேங்காய் எண்ணெய், நெய், பட்டர், மாஜரின் போன்றவை பாதகமானவிளைவுகளை ஏற்படுத்தும்.

சில நோயாளர்கள் பாகற்காய் சாப்பிடுவதால் இந்த நோய் நீங்கி விடுகிறதென்று தப்பாக எண்ணுகிறார்கள். பாகற்காய் உண்பதனால் அது சாப்பிடும் நேரம் சலத்தில் சீனி குறைவாக இருக்கும். அவ்வளவு தான். அதற்காக ஏன் கசப்பு நிறைந்த பாகற்காயை எந்த வேளையும் உண்ண வேண்டும்?

உங்கள் பகுதியிலுள்ள நீரிழிவு நோயாளி மயங்கும் நிலைக்குச் செல்கிறார் என்பதைக் கண்டதும் முதலுதவியாளன் அவரது வாய்மூலமாக சீனியை உட்செலுத்த வேண்டும். இரத்தத்திலுள்ள சீனியின் அளவு குறைவதால் அவருக்கு மயக்கும் தன்மை ஏற்படுகிறது. இதனால் கோமா ஏற்படாது தடுக்கலாம்.

உடன் சீனி வழங்கும் போது இரத்தத்தின் சீனியின் அளவு அதிகரிக்கும்.

இந்நோயாளி தனது சுயபாதுகாப்புக்கு எந்நேரமும் சிறிதளவு சீனியைத் தன்னுடன் வைத்திருக்கலாம். மயக்கம் ஏற்படுவது போல இருக்கும் [illegible] அவற்றை வாயில் போட்டுக் கொள்ள வேண்டும்.

பா. ரகுநாதன்

# குன்றக்குடிக்கு வள்ளுவர் விருது; அதனால் விருதுக்கு வந்தது சிறப்பு

தமிழக அரசு இவ்வாண்டுக்கு உரிய திருவள்ளுவர் விருதினை தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது.

இந்த இனிய செய்தி கேட்டு மகிழ்ச்சி அடையாத தமிழ் உள்ளமோ, சைவ இதயமோ இருக்க முடியாது.

இவ்விருதினை வழங்கி, அடிகளாரைச் சிறப்பித்ததுடன், திருவள்ளுவர் விருதினுக்கு அரசு சிறப்பினைத் தேடி உள்ளது.

ஒரு நாட்டுக்கு தனித்துவமான தேசியச் சின்னம் இருப்பது போல சமய சார்பற்ற இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டை பிரதிபலிக்கும் தேசிய நூலாக விளங்கும் தகுதி திருக்குறளுக்கு உண்டு. இந்திய அரசு திருக்குறளைத் தேசிய நூலாகப் பிரகடனஞ் செய்ய வேண்டும்-என்று குரல் கொடுத்தவர் குன்றக்குடி அடிகளார்.

எதுகை மோனை துள்ளும் இனிய தமிழிலே உவமைகளைக் கையாண்டு

தேன்கூடு

ஆற்றொழுக்குப் போல பேசுந்திறன் படைத்தவர் அடிகளார்.

அடிகளாரின் பேச்சில் ஒரு தனித்துவம் உண்டு. பேச்சின் முடிவிலே தனது கருத்துக்களின் சாரத்தைத் தொகுத்துக் கூறுவார். இதனால் பல வித பயனுண்டு.

பேச்சின் இடையில் வந்தவர்கள் பயனடைகிறார்கள். அனைவருக்கும் செவிமடுத்த கருத்திலே அழுத்தம் ஏற்படுகிறது. எம்மைப் போன்ற செய்தியாளர்களுக்கோ எடுத்த குறிப்புகளைச் சரிபார்க்க முடிகிறது.

மறைந்த தலைவர் கோப்பாய் கோமான் திரு கு. வன்னியசிங்கத்தின் முயற்சி காரணமாக திருகோணமலை நகரின் எல்லைப் புறத்தில் காடு வெட்டி குடியேறும் முயற்சியில் தமிழ் மக்கள் ஈடுபட்ட காலமது.

அப்போது திருகோணமலைக்கு வருகை தந்த தவத்திரு குன்றக்குடி



அடிகளார் தமிழர் குடியிருப்புக்கு ''அன்புவழிபுரம்'' என்று அழகாகப் பெயர் சூட்டினார்.

சுமார் இருபதாண்டுகள் கழித்து அன்புவழிபுரத்தில் மக்கள் மத்தியில் உரையாற்ற வந்தார் அடிகளார். அங்கு குழுமி இருந்த சிறுவர்களின் நிலைகண்டு துடித்துப் போனார். கண்கலங்கப் பின்வருமாறு பேசினார்:-

''இங்குள்ள சிறார்கள் மெலிந்து சோர்ந்து காணப்படுகிறார்கள். அவர்களிடத்தில் துடிப்பில்லை. சோர்வுதான் உண்டு.

அண்மையில் ருஷ்ய நாட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு சிறுவர்கள் மொள மொள என்று இருக்கின்றார்கள். முகத்திலே மலர்ச்சி தென்படுகிறது. வளர்ச்சி அடைந்து காணப்படுகிறார்கள். அவர்களைப் போல் நமது சிறுவர்கள் நல்ல போஷாக்கு உள்ளவர்களாக இருக்க வேண்டும். நல்ல உணவு உண்ண வேண்டும். இவ்வயதில் விளையாட்டு வாய்ப்பு அளிக்க வேண்டும் எமது வருங்கால சந்ததியை நாம் பேணிக் காக்க வேண்டும்.''

இவ்வாறு மிகவும் உருக்கமாகப் பேசி முடித்தார்.

அடிகளார் திருகோணமலையில் கூட்டமொன்றுக்குக் காரில் சென்று கொண்டிருந்தார். வழியில் ரயில் வந்து கொண்டிருந்ததால் கார் நிறுத்தப்பட்டது. உடனே, ரயிலை நிறுத்தாமல் ஏன் காரை நிறுத்துகிறார்கள் என்று கேள்வி எழுப்பினார்.

''மோட்டார் கார் தனிமனிதனைக் குறிக்கிறது. ஆனால் ரயில் வண்டி பொதுமக்களைக் குறிக்கிறது. பொதுநலத்தின் முன்னால் தனிமனிதனின் சுகம், நலம் வளைந்து கொடுக்கவேண்டும் என்பது இதன் பொருள்'' — என்று அதற்கு விளக்கமும்அளித்தார் அடிகளார்.

அடிகளார் ஒரு துறவியாக இருப்பினும் தமிழின்பால் உள்ள காதலையும், சைவத்தின் மீதுள்ள பற்றையும் துறக்க முடியாத சாமானியன்.

தமிழ் மக்கள் தமது குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும் தமிழுக்கு உரிய இடமளிக்க

சுந்தரனார்

வேண்டும் என்பது அடிகளாரின் வேணவா.

கோயிலிலே தமிழிலும் வழிபாடு இடம்பெற வேண்டும் என்பது அவர் கொள்கை. இது வடமொழி வெறுப்பினாலோ தமிழ்மொழி வெறியினாலோ விளைந்தது அல்ல.

வழிபாட்டில் மனம் லயிக்க வேண்டும். தாய்மொழி வழிபாட்டில் இந்த லயிப்பு இயல்பாக மலரும். எனவே கோயில்களிலே தமிழிலும் பூசை நிகழவேண்டும் என்பது அடிகளாரின் வாதம்.

அப்பரடிகளின் சீர் திருத்தங்களில் மனதைப் பறிகொடுத்தவர் குன்றக்குடி அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இல்லத்தரசிக்கு அறிவுரை-3

# தன்னம்பிக்கை ஊட்டுவது தாயின் கடமை

பிள்ளைகளைப் பய உணர்வு பீடிக்காமல் பார்க்க வேண்டியவர்கள் தாய்மார்.

இருட்டில் தனியாக இருப்பது வளர்ந்தவர்களுக்கே சிரமம்.

அப்படியானால் குழந்தைகளுக்கு அது எப்படியான அனுபவம்?

பிள்ளைகள் பயமாக இருப்பதாகக் கூறினால், அதைக் கேலி செய்யாதீர்கள். மாறாக அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டுங்கள். ஆறுதல் வார்த்தை கூறுங்கள். அரவணைப்பு நல்குங்கள்.

பிள்ளைகள் தூங்கச் செல்லும்போது, இறுக அணைத்து, மென்குரலில் இனிமையாகப் பேசுங்கள்.

சிலவேளைகளில் நித்திரையில் குழந்தைகள் உரத்துக் கத்துவார்கள். அப்போது அவர்களுக்கு நெருக்கமானவர்கள் அருகில் இருப்பது அவசியம்.

சிலவேளைகளில் குழந்தைகளைப் பயப்படுத்துவதில் வளர்ந்தவர்கள் சிலர் மகிழ்ச்சி அடைகிறார்கள். இதனால் இரவில் நித்திரையில் குழந்தைகள் பயத்தால் விரிட்டு அலறுவதைக் காண்கிறோம். இவ்வாறு பயப்படுத்தும் முயற்சிகளை அனுமதிக்கக் கூடாது.

## குழந்தையை மிரட்டி வாழ்வைக் கெடுக்காதீர்

சில குழந்தைகளுக்கு கும்மிருட்டைக் கண்டால் பயம் தோன்றும். இதனை உணர்ந்து பெற்றோர் குழந்தையின் படுக்கை அறையில் சிறு மின் வெளிச்சம் எரிந்து கொண்டிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனியே அறையில் நித்திரை கொள்ள அஞ்சினால், குழந்தையுடன் அருகருகே அதே அறையில் சகோதரர்களைத் தூங்கச் செய்யவும் அல்லது அறையின் கதவைத் திறந்து வைத்து நித்திரை செய்யும்படி கூறவும். இவை குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையை ஏற்படுத்தும்.

குழந்தைகள் தூக்கத்தில் குழறுவது பெற்றோருக்கு தாங்க முடியாத அனுபவமாக இருக்கும்.

பொறுமையாகஇருந்து பெற்றோர் குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை ஊட்டி பயத்தைப் போக்க வேண்டும்.

படுக்கைக்குப் போகு முன்னர் முகம் கழுவி வழிபாடு செய்து, பெற்றோருடன் சிரித்துக் கதைத்துப் பேசும் வழக்கம் தேவை.

சில பிள்ளைகள் தமது விளையாட்டுப் பொருள்களை தமக்கு அருகில் வைத்துத் தூங்க விரும்புவார்கள். இதனை அனுமதிக்க வேண்டும். அது அவர்களுக்கு துணை என்ற உணர்வைத் தரும்.

குழந்தைகளை மிரட்டி காரியத்தை நிறைவேற்றுவதிலும் பார்க்க, அவர்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டுவதுதான் முக்கியமானதாகும். இதனை தாய்மார் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெற்றோர் கொடுக்கும் தன்னம்பிக்கையில்தான் குழந்தையின் எதிர்காலம் தங்கியிருக்கிறது என்பதை மறந்து விடாதீர்கள்.

★ அபிராமி வரதன் ★




## சுவைத்துப் பாருங்கள்!

### தேங்காய்ப்பூவும் ரவையும் சேர்ந்த இனிப்பு

**தேவையான பொருள்கள்:-**

அரைக்கிலோ ரவை (வறுக்கப்பட்டது).
அரைக்கிலோ துருவி பொன்னிறமாக வறுக்கப்பட்ட தேங்காய்ப்பூ.
ஒரு கிலோ சீனி.
1 தேனீர்க்கோப்பை நீர்.
1 தே. கரண்டி ஏலப்பவுடர்.

**செய்முறை:-**

ரவையைத் தேங்காய்ப்பூவுடன் சேர்த்துக் கலக்கவும். பின்பு சீனியையும் நீரையும் சேர்த்துப் பாணி காய்ச்சவும். பாணி தடிக்கும்போது தேங்காய்ப்பூ ரவை சேர்ந்த கலவையை இட்டு கிண்டவும். கலவை தடித்து இறுகும் பதம் வரும்போது நிறத்தையும் வாசனைப் பொருள்களையும் இட்டுக் கிளறி பட்டர் பூசிய தட்டில் கொட்டிப் பரவி துண்டங்களாக்கவும்.

### வட்டிலப்பம்

**தேவையான பொருள்கள்:-**

2 கோப்பை சர்க்கரை.
6 கோப்பை தடித்த தேங்காய்ப்பால் (2தேங்காய்).
8 முட்டை.
3 தே. கரண்டி கோர்ண் மா (Corn Flour)
1 தே. கரண்டி சாதிக்காய்த் தூள்.
25 கஜு. (முந்திரிகைப் பருப்பு)

**செய்முறை:-**

சர்க்கரையைத் தூளாக்கி தேங்காய்ப்பாலில் ஊறவைக்கவும். முட்டையை நன்கு அடித்துக் கொள்ளவும். கோர்ண் மாவை சிறிது பாலில் கரைத்துக் கொள்ளவும். பின்பு யாவற்றையும் சேர்த்துக் கொள்ளவும். வாசனைப் பொருள்கள் சேர்த்து ஒரு பாத்திரத்தில் ஊற்றவும். மேலே தூளாக்கப்பட்ட முந்திரிகைப் பருப்பைத் தூவி, கொதிநீருள்ள பாத்திரத்திலிட்டு மூடி அவித்தெடுக்கவும்.

திருமதி வசுமதி முத்துக்குமாரசாமி

## வணிகனும் வனாந்தரக் கப்பலும்

ஒரு நாள் வணிகனொருவன் வியாபாரம் செய்வதற்காக அயலூருக்குப் புறப்பட்டான். வியாபாரப் பொருள்களைத் தனது ஒட்டகத்தின் உதவியுடன் எடுத்துச் சென்றான்.

செல்லும் வழியில் அன்றைய பொழுது சாய்ந்து, இருட்டி விட்டதால் இரவு தங்கிப் போக நேர்ந்தது.

தனது பிரயாணத்தை தொடரமுடியாது மனம் வருந்திய வணிகன் ஒரு கூடாரம் அடித்து-அதிற் தங்கினான்.

குளிர் காலமாதலால் மெல்லென வீசிய காற்று உடம்பில் பட்டு 'ஜில்' என்றிருந்தது. படுத்திருந்த வணிகனுக்குத் தூக்கம் வரவில்லை. ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

கூடாரத்துக்கு வெளியில் நின்றிருந்த ஒட்டகம் குளிரினால் நடு நடுங்கிப் போனது. நிற்கவும் முடியாமல், படுக்கவும் முடியாமல் அது மிகவும் கஷ்டப்பட்டது.

வணிகனைப் பார்த்து, 'ஐயா, வணிகரே! என் தலையை மட்டும் கூடாரத்தின் உள்ளே வைத்திருக்க அனுமதியுங்கள். வெளியில் கடுங்குளிராயிருக்கிறது' என்றது ஒட்டகம்.

அதன் குரல் கெஞ்சுவது போல் ஒலித்தது.

இரக்க சிந்தையுடைய அந்த வணிகனும் 'சரி' என்று தலையசைத்தான். நன்றி கலந்த பார்வையுடன் ஒட்டகம் தலையைக் கூடாரத்தினுள் விட்டுக் கொண்டது.

சிறிதுநேரங் கழிந்தது. 'ஐயா! என் முன்னங் கால்கள் இரண்டையும் உள்ளே வைத்திருக்க உதவுங்கள். என்னால் குளிர் தாங்க முடியவில்லை.' என்றது ஒட்டகம்.

அதன் மேல் கருணை கொண்ட வணிகனும் அதற்கும் சம்மதித்தான். ஒட்டகமும் அவ்வாறே செய்தது.

சற்று நேரத்தில் மீண்டும் அதன் குரல்: 'வணிகரே! என் முதுகையும் உள்ளே வைக்க அனுமதியுங்கள். நடுக்கமாயிருக்கிறது' என்றது.

அதைப் பார்க்க அவனுக்குப் பாவமாயிருந்தது. 'சரி நான் தள்ளிப் படுத்துக் கொள்கிறேன். நீ முதுகையும் உள்ளே விட்டுக் கொள்' என்று சொல்லிய வணிகன் நகர்ந்து படுத்துக் கொண்டான்.

மேகத்தில் 'சரேலென' மின்னல் பாய்ந்தது. இடி முழக்கம் அதிர்ந்தது.

அப்போது, ஒட்டகம் வணிகனைப் பார்த்துப் பின்வருமாறு கூறியது:

'ஐயா, வணிகரே! வெளியில் குளிர் தாங்க இயலாது. நீர் வெளியே போய்ப் படுத்துக் கொள்ளும். நான் முழுதாக உள்ளே வரப்போகிறேன்'

அது கேட்ட அவன் 'அடடே! கொஞ்சம் இடங்கொடுத்தால் நீ என்னையே விரட்டப் பார்க்கிறாயே' என்று கோபத்துடன் ஒட்டகத்தைப் பிடித்து முற்றாக வெளியில் விட்டான்.

இக் கதையிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் எதற்கும் ஒரு அளவு வேண்டும். அளவுக்கு மீறினால் அமுதமும் விஷமாகும்.

'தனக்கு மிஞ்சித் தான் தானம்'

(ஒட்டகத்துக்கு இன்னொரு பெயர் வனாந்தரக் கப்பல்)

- இ. ஸ்ரீதரன் -

## குழந்தைகளும் குருவிகளும்

**குழந்தைகள்:**

குருவிகளே! குருவிகளே!!
எங்கே போகின்றீர் — உம்மை
குடியெழுப்பி விட்டவர் யார்
கூறமாட் டீரோ?

**குருவிகள்:**

வானமெங்கும் குண்டுவெடிகள்
சிதறி வெடிக்குதே — எங்கள்
கூடு, குஞ்சு, கூட்டமெல்லாம்
குலைந்து போச்சுதே
கானகத்தில்கூட நாங்கள்
இருக்க இடமில்லை — வந்து
காட்டுவீரோ எங்களுக்கு
இனிய தாயகம் — இதய தாயகம்

★ சிவன் ★

## பூவும் பாப்பாவும்


**பாப்பாவின் கேள்வி:-**

பூவே, பூவே எங்கிருந்தாய்?
இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?
நானும் உன்னைத் தேடித் தேடி
நாளும் பொழுதும் கழிந்தனவே.
பூவே, பூவே எங்கிருந்தாய்?
இத்தனை நாளாய் எங்கிருந்தாய்?

**பூவின் பதில்:-**

பாப்பா, பாப்பா கேள் கண்ணே!
பாரில் மொட்டாய் மறைந்திருந்தேன்
பாடும் உன்னைக் காண்பதற்கே
பூவாய் நானும் ஒளிபெற்றேன்.
உண்மை இதுதான் கேள்கண்ணே!
உன்னைக் கண்டேன் இன்புற்றேன்
என்னை நீயும் கொய்திடுவாய்
ஈசன் பாதம் சேர்த்திடுவாய்.

- தம்பி -




## உங்களுக்கு சில அறிவுரைகள்

சுறுசுறுப்பாயிருங்கள், ஆனால்
படபடப்பாய் இருக்காதீர்கள்.
பொறுமையாயிருங்கள், ஆனால்
சோம்பேறியாய் இருக்காதீர்கள்.
பற்றற்று இருங்கள், ஆனால்
காட்டுக்குச் சென்று விடாதீர்கள்.
அன்பாயிருங்கள், ஆனால்
அடிமையாக இருக்காதீர்கள்.
சிக்கனமாயிருங்கள், ஆனால்
கருமியாய் இருக்காதீர்கள்.
இரக்கம் காட்டுங்கள், ஆனால்
ஏமாந்து விடாதீர்கள்.

- தொகுப்பு: ஈ. கீதா -

## உலகிலே உயரமானவர்

உலகிலேயே உயரமான மனிதனாக கணிக்கப்பட்டு உள்ளவர் ஓர் அமெரிக்கர். றொபேர்ட் பி. வார்ட்லோ. 1918 ஆம்ஆண்டில் பிறந்தவர்.

டபிள் ஹேர்ணியநோய் காரணமாக சத்திர சிகிச்சை நடைபெற்ற பின்னர் அவர் அசாதாரண உயரமாக வளரத் தொடங்கினார். இது இரண்டு வயதில் ஆரம்பமானது.

இவரது உயரத்தை வைத்தியர்கள் 1940ஆம் ஆண்டு ஜூன் 27 இல் கணித்தார்கள். அப்போது அவரது உயரம் 8 அடி 11. 1 அங்குலம். பதினெட்டு நாட்களின் பின்னர் இவர் காலமானார்.

இவரை அடக்கம் செய்த சவப்பெட்டியின் நீளம் 10 அடி 9 அங்குலம்.

அம்மாடியோவ்!

### யாரை நம்பி புருஷனை கைவிடுவது?

## அரசையா? அரசனையா?

'அரசனை நம்பி புருஷனைக் கைவிட்ட கதை.' இந்தப் பழமொழியை நாம் அடிக்கடி உபயோகிப்பதுண்டு. இதன் கருத்து என்ன?

உண்மையில் இந்தப் பழமொழியின் வடிவம் 'அரசை நம்பி புருஷனை கைவிட்ட கதை' என்பதுதானாம்.

அரச மரத்தை சுற்றி வந்து வணங்கினால் குழந்தை பிறக்கும் என்பது நமது ஆன்றோர் நம்பிக்கை.

இந்த நம்பிக்கையின் அடிப்படையில் புருஷனை ஒதுக்கிவிட்டு வெறுமனே அரசை மட்டும் சுற்றிச் சுற்றி கும்பிட்டால் குழந்தை பிறந்து விடுமா? இல்லவே இல்லை. புருஷனின் கூடலும் வேண்டுமல்லவா?

இந்தக் கருத்தில் எழுந்ததுதானும் இப்பழமொழி.

## காப்பி குடிப்பீர்களா?

### உங்களுக்கு ஓர் எச்சரிக்கை

நாளாந்தம் ஐந்து கப் காப்பிக்கு அதிகமாகக் குடிப்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கை!

இருதய நோய்கள் வரும் ஆபத்து இவர்களுக்கு மும்மடங்கு அதிகமாக உண்டு என்று அமெரிக்க வைத்திய நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அமெரிக்க இருதய சங்கத்திற்கு இது சம்பந்தமான வைத்திய அறிக்கை ஒன்றை ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் வைத்திய கல்லூரி அண்மையில் சமர்ப்பித்தது.

புகைத்தல், உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது, அதிக காப்பி அருந்துபவர்களுக்குத்தான் இருதய நோய்கள் அடிக்கடி ஏற்படுகின்றதாம்.

காரணம், பெரும்பாலான காப்பிப் பிரியர்கள், புகைப்பவர்களாகவும் இருப்பதே!

- எஸ். ஜி. -

# பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## ஏழுமுறை திருமணம்; நடிகை செய்த சாதனை

இதுவரை ஏழுமுறை திருமணம் செய்துகொண்டவர் ஹொலிவுட் நடிகை எலிசபெத் டெய்லர்.

இரண்டு முறை,காலஞ் சென்ற ரிச்சர்ட் பர்ட்டனுடன் எலிசபெத்தின் திருமணம் நடந்தது.

2 ஆண்டுகளுக்கு முன்னர் நீண்ட இடைவெளிக்குப் பிறகு, தன் 55-ம் வயதில் The Little Foxes எனும் பிராட்வே நாடகத்தில் நடித்தார். நாடக விமர்சகர்கள், எலிசபெத் டெய்லரின் நடிப்பை அவ்வளவாகப் பாராட்டவில்லை.

குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான எலிசபெத் டெய்லருக்கு 'Who's afraid of Virginia Woolf?' படத்தின் சிறந்த நடிப்பிற்காக ஆஸ்கார் பரிசு கிடைத்துள்ளது.

கடந்த வருடம் எட்டாவது கணவராக அமெரிக்க வழக்கறிஞரை மணந்துகொள்ள செய்துகொண்டிருந்த நிச்சயதார்த்தத்தை எலிசபெத் டெய்லர் முறித்துக் கொண்டார்.

ஏழு திருமணங்களின் போதும், தன் கணவன்மார்களைப் பற்றி எலிசபெத் டெய்லர் கூறிய கருத்துக்கள்:

'நமக்கேற்ற சரியான ஆண் யார் என்று நம் இதயம் அறியும். நிக்கி தான் அந்த ஆண் என் பதில் கொஞ்சங்கூட சந்தேகமில்லை. என் வாழ்க்கை முழுவதையும் அவருடன் கழிக்க வேண்டும் என்பது தான் என் ஆசை'

— மே 6, 1950-ம் ஆண்டு முதல் கணவர் கான்ராட் நிக்கல்சன் ஹில்டனை மணந்த போது.

''நான் மைக்கேலுடன், அவருடைய மனைவியாக எப்போதும் வாழ விரும்புகிறேன். இது என்னைப் பொறுத்தவரை, ஒரு மகிழ்ச்சியான முடிவின் தொடக்கம்.'

— பிப்ரவரி, 21, 1952-ல் மைக்கேல் வைல்டிங்கை இரண்டாவது கணவராக ஏற்றுக் கொண்டபோது.

''என் இதயத்தின் ஈடற்ற காதலை நான் இவருக்குக் கொடுத்திருக்கிறேன். இந்தத் திருமணம் என்றும் நிலைத்து நிற்கும். எனக்கு எப்போதும் மூன்றுதான் ராசியான எண்.'

— பிப்ரவரி, 2, 1957-அன்று மைக் டாட்டை மூன்றாவது கணவராக மணம் புரிந்து கொண்டபோது.

'இதைவிட சந்தோஷமாக என் வாழ்வில் நான் என்றும் இருந்ததில்லை. நாங்கள் எங்கள் தேனி[illegible] ஆண்டுகள் கொண்டாடு[illegible]வோம்.'

— மே, 12, 1959-அன்று நான்காவது கணவர் எட்டி ஃபிஷரை மணந்துகொண்டபோது.

''நான் எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறேன் என்பதை என்னாலேயே நம்பமுடியவில்லை நான் அவரை அவ்வளவு காதலிக்கிறேன். எந்த சக்தியும் எங்களைப் பிரிக்க முடியாது.'

— மார்ச் 15, 1964-ல் ஐந்தாவது கணவர் ரிச்சர்ட் பர்ட்டனை மணந்தபோது.

''இனிமேல் கல்யாணங்களுக்கும், விவாகரத்துக்களுக்கும் இடம் இல்லை. நாங்கள் இருவரும் தாரோடு ஒட்டிக் கொண்ட கோழி இறகுகளைப் போல் இணைந்து விட்டோம் - என்றும் காதலுடன் இருக்க.'

— அக்டோபர் 10, 1975-அன்று மறுபடியும் ரிச்சர்ட் பர்ட்டனை மணந்துகொண்டபோது.

''இதுவரை நான் சந்தித்தவர்களுள் ஜான் தான் மிகச்சிறந்த காதலர். நான் என் வாழ்க்கையின் மீதி காலத்தை அவருடன் தான் கழிக்க விரும்புகிறேன். அவருடன்தான் என்னையும் புதைக்க வேண்டும் என்பது என் ஆசை.'

— டிசம்பர், [illegible] 1976-அன்று ஏழாவது கணவர் [illegible] வார்னரை மணந்துகொண்டபோது.

### இருபது நாளானால் மனைவி அவுட்!

கணவன் தூரப் பயணம் ஒன்றை மேற்கொண்டு 20 தினங்களுக்கு மேல் வெளியூரில் இருந்தால் போதும், அவரின் மனைவி வேறொருவரை திருமணஞ் செய்துகொண்டுபோய்விடுவாள்.

இந்தப் பழக்கம் எங்கே இருந்தது என்று எண்ணுகின்றீர்கள்?

சீனாவில் உள்ள டர்க்கிஸ்தான் என்னும் இடத்தில் இந்த அபூர்வ பழக்க வழக்கம் இருந்ததாக வெனிஸ் நாட்டு உல்லாசப் பிரயாணியான சரித்திர ஆராய்ச்சியாளர் மார்க்கோ போலோ தனது டைரியில் எழுதி வைத்துள்ளார்.

### காரை அலங்கரித்த பிரியர்

தனது காரை பத்தாயிரம் நாணயக் குற்றிகளால் அலங்கரித்துள்ளார், கலிபோர்னியாவைச் சேர்ந்த இ. ஸ்டீன் கோல்ட் என்பவர்.

இந்த நாணயங்கள் உலகின் பல பாகங்களில் இருந்தும் சேகரிக்கப்பட்டவை.

லாஸ்வேகாஸில் காசினோ ஒன்று நடத்தும் முதலாளி ஒருவர் இக்காரை 3 மில்லியன் டாலர் கொடுத்து வாங்க முயற்சித்தார்.

உரிமையாளர் அதற்கு சம்மதிக்கவில்லை.

## கேர்ணல்களை பெற்று தள்ளிய பெரியவர்

இராணுவ கேர்ணல்களாகப் பெற்றுத் தள்ளிய ஒரு பிரான்ஸ் நாட்டவர் 1630 — 1747 காலகட்டத்தில் வாழ்ந்தார்.

அவரின் பெயர், ஜேக்ஸ் டி தியர்ஸ்

அவருக்கு 25 மகன்கள், 1 புதல்வி.

25 மகன்மாரும் பிரஞ்சு இராணுவத்தில் கேர்ணல்களாகப் பதவி வகித்தனர்.

1690 ஜூலை 1 ஆம் திகதி இடம் பெற்ற பிளூரஸ் யுத்தத்தில் 25 கேர்ணல்களும் 25 படைப்பிரிவுகளின் தலைவர்களாக பணிபுரிந்தனர்.

யுத்தம் முடிந்த பின்னர் பிரஞ்சு படைத் தளபதி பிரஞ்சு மன்னர் லூயிக்கு ஒரு கடிதம் எழுதினார். ''கேர்ணல் சகோதரர்கள் காட்டிய வீர, தீரம் பற்றி பாராட்டவேண்டும்'' - என்று கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

### காதல் தோல்வி இப்படி ஆகியது

பிரஞ்சுக் கடற்படைக் கப்டன் ஒருவன், ஒரு பெண்ணை மனமாரக் காதலித்தான்.

இதனிடையில் கடமை குறுக்கிட்டது. கடற்பயணம் ஒன்றை மேற்கொண்டு சென்றான்.

திரும்பி வந்த பொழுது, காதலி இறந்ததை அறிந்தான்.

கவலை, கடற்படை கப்டனை ஆட்கொண்டது. வாரக் கணக்கில் மயங்கிக் கிடந்தான்.

நினைவு வந்தவுடன், கடற்படைக்கு முழுக்குப் போட்டான். ஆணுக்குரிய உடுப்புக்கள் அணிவதையே நிறுத்தினான்.

மறைந்த காதலி கரோலின் அணிந்தது போன்ற பெண் உடுப்புக்களை அணியத் தொடங்கினான்.

இறக்கும்வரை, 23 ஆண்டுகளாக, பெண் உடுப்பது போன்றே உடுத்து வாழ்ந்து மறைந்தான்.

1787இல் பிறந்த அவன் 1848இல் மறைந்தான்.

### பேசும் சக்தி அற்றவர்கள்

மிருகத்தில் இருந்து மனிதன் வேறுபடுவது, பேசும் சக்தி இருப்பதால்.

ஒருபழங்குடி உலகில் வாழ்கின்றது. அவர்கள் ஒரு வார்த்தை கூட பேசியது இல்லையாது. எத்தனையோ தலைமுறைகளாக பேசும் சக்தியே அவர்களுக்கு வரவில்லை.

கிழக்கு பொலிவியா நாட்டில் வாழும் இயூரங்கு இந்திய இனத்தவர்தான் இத்துரதிருஷ்டம் பொருந்திய பழங்குடியினர்.

அவர்களின் நாக்கு, குரல்வளை பேச முடியாதபடி அமைந்துள்ளதாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாட்டு அடிப்படையில் ஓங்கிச் சிறந்த கட்டடக் கலை

## வெவ்வேறு மதங்களும் வகுத்த திறனில் கவின் பெற செழித்து உயர்ந்தது

வி. சிவசாமி எம். ஏ
சமஸ்கிருதத் துறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்.

இந்து நாகரிகம்
க. பொ. த ப.
[ உயர்தரம் ]

சோலைகள், ஆறுகள், மலைகள், பூங்காக்கள், சிறந்த இடங்கள் முதலிய இடங்களில் தேவர்கள் உறைகிருர்கள் எனப் பழமைவாய்ந்த நூல்களில் ஒன்ருன பிருகத் சம்ஹிதை கூறுகிறது. இது மக்கள் தெய்வீகத்தை உணரும் பல்வேறு இடங்களை எடுத்துக் காட்டுகிறது. தெய்வீகம் குடிகொண்டிருக்கும் இடம் சிறந்ததாகவும் அமைதியும் அழகும் நிரம்பியதாகவும் இருப்பது அவசியம். இவ்வாறு தெய்வங்கள் உறையும் இடங்களாகிய குன்றுகள், மலையடிவாரம், காடுகள், சோலைகள், தபோவனம், கிராமம், நகரம், குகைகள் எல்லாம் முக்கியத்துவம் பெற்றன.

**கோயில்கள்:**

தெய்வங்களின் பல்வேறு உருவங்களை அமைத்துக் கோயில் எழுப்ப இத்தகைய இடங்களே தேர்ந்தெடுக்கப்படுகின்றன. பக்தி நெறியும் கடவுளை வழிபடுவதும் தொன்மையானவை. அதுபோன்றே தெய்வங்களுக்குக் கோயில் கட்டுவதும் மிகப் பழங்காலந்தொட்டே இருந்து வருகிறது. சமயத்தில் பரம்பொருளை உணர்வதற்கான வழியாகப் பக்தி நெறியைப் பரப்பக் கோயில்கள் மிக முக்கிய இடங்களாயின.

**பௌத்தர்:**

இந்தியாவில் மூன்று பிரதான மதங்கள் தம் கொள்கையைப் பரப்ப இச்சாதனத்தை (கோயில்களை)ப் பயன்படுத்தின. முதலில் பௌத்தம் பரவலாகவும் பெருமளவிலும் இச்சாதனத்தைப் பயன்படுத்தியது. பௌத்தர்கள் ஸ்தூபங்களையும் தூண்களையும் எழுப்பினர். எடுத்துக்காட்டாக சாஞ்சி, பார்ஹூத், அமராவதி ஸ்தூபங்களையும் சாரநாத் தூண்களையும் கூறலாம். பௌத்த பிக்குகள் தங்களுக்கெனப் பாறைகளைக் குடைந்து இருப்பிடம் அமைத்தனர். அதற்குள் சைத்திய முற்றங்களை அமைத்து அவை ஒவ்வொன்றிலும் தமது வழிபாட்டுக்குரிய பிரதான சின்னமாகிய ஸ்தூபத்தை ஏற்படுத்தினர். புத்த பிக்குகள் வாழிடங்களாக விகாரைகளும் சைத்திய முற்றங்களும் கி. மு. 2 ஆம் நூற்றாண்டிலிருந்து கி. பி. 7 அல்லது 8 ஆம் நூற்றாண்டுக்குள் ஏற்பட்டன. நாசிக், அஜந்தா, எல்லோரா, அவுரங்கபாத் குகைகள் குறிப்பிடத்தக்கன.

**சைனர்:**

இத்துறையில் சைனரும் பௌத்தர்களைப் பின்பற்றினர். இவர்களும் ஸ்தூபங்களை எழுப்பினரெனக்கருத இடமுண்டு. சைனர் குகைக் கோயில்களும் அமைத்தனர். மதுரா போன்ற இடங்களில் இவற்றின் இடிபாடுகளைக் காணலாம். குகைக் கோயில்களில் ஒரிசாவிலுள்ள கண்டகிரி, உதயகிரிக் குகைகளிலுள்ள கோயில்கள் முக்கியமானவை. சைனக் கோயில்கள் இந்தியாவில் பல்வேறு பகுதிகளிற் கட்டப்பட்டன.

**பாகவதர்:**

இந்தியாவில் இந்து மதக் கோயில்கள் அதிகம். பாகவத மதத்தைக் கைக்கொண்ட ஹெலியோடோரஸ் என்ற யவனர் கருடத்துவஜம் ஒன்றை எழுப்பிய செய்தி கி. மு 100 ஆம் ஆண்டைச் சேர்ந்த பேஸ்நகர்க் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளது. சங்கர்ஷணன், வாசுதேவன் ஆகியவர்களுக்குக் கோயில் கட்டப்பட்டது குறித்துக் கல்வெட்டுக்களிலிருந்து அறிய முடிகிறது. இதைப் போன்ற பல்வேறு சான்றுகளிலிருந்து இந்துக் கோயில்கள் பற்றி அறிய முடிகிறது.

**குப்தர் காலம் :**

இந்துக் கோயில்கள் இந்து மதத்தின் ஏதாவது ஓர் அம்சத்தைக் கொண்டதாக அமையும். கோயில் வழிபாட்டின் புராதனத்தை இவ்வம்சங்கள் காட்டுவன முன்னர் ஆலய வழிபாடு காணப்பட்டமைக்குப் பல சான்றுகள் காணப்படினும் குப்தர் காலத்துக்குப் பின்னரே இந்து மதத்திற்குப் புத்துயிரளிக்கும் முயற்சியில் இத்துறையில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

**முக்கிய கோயில்கள்:**

குகைகளை நிலைக்களனாகக் கொண்டு அமைக்கப்பட்டவற்றில் பாதாமி, எலிபென்ரா, எல்லோரா, மகாபலிபுரம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட அற்புதமான குகைக் கோயில்கள் குறிப்பிடத்தக்கன. கி பி. 6-8 ஆம் நூற்றுண்டுக்குள் இவை அமைக்கப்பட்டன. மகாபலிபுர ரதங்கள், எல்லோரா கைலாசநாதர் கோயில், கழுகுமலைச் சிவன் கோயில் என்பனவும் குறிப்பிடத்தக்கன. இந்துக்கள் வேறு ஆலயங்களையும் கட்டினர். தென்னிந்தியாவில் சிதம்பரம் நடராசர் கோயில், திருவண்ணமலைக் கோயில், தஞ்சைப் பெரியகோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், திருச்சி மலைக் கோட்டைக் கோயில், திரிபுவனம் கோயில் போன்றவவை குறிப்பிடத்தக்கன.

**ஆகமங்களும் கோயில்களும்**

இந்துக் கோயில்களைப் பற்றி அறிய ஆகமங்கள் துணை புரிவன. சைவ ஆகமங்களும் வைணவ ஆகமங்களும் குறிப்பிடத்தக்கன. கோயில் நிர்மாணம், சிற்பங்களை உருவாக்கும் முறை, கோயிலில் விக்கிரகப் பிரதிஷ்டை முதலியவற்றை ஆகமங்கள் கூறுவன. கோயில் அமைப்பு, சிற்ப விதிமுறை முதலியவற்றைக் கூறும் நூல்களுள் ஆகமம் சிறப்புடையது. பத்தாம் நூற்றுண்டுக்குப் பின்னர் சிற்பங்களைப் பற்றிய சிற்பசாஸ்திரங்கள் பெருமளவில் எழுதப்பட்டன. சைவ ஆகமங்களில் கோயில் அமைப்பு, சிற்ப விதி முறை பற்றிக் கூறுவனவற்றுள் காமிகம், காரணம் ஆகிய ஆகமங்கள் முக்கியமானவை.

**கோயிற் கட்டடக் கலைஞர்**

கோயில் நிர்மாணத்தைத் தலைமையேற்று நடத்துபவனே ஸ்தபதி, நாலினுல் அளவெடுப்பவர் (சூத்ர கிராகி) வெட்டிச் செதுக்குபவர் (தக்ஷகன்), வர்ணந் தீட்டுபவர் (வர்த்தகி) முதலியோர் ஸ்தபதியின் உத்தரவுப் படி நடக்க வேண்டியவர்களாவர். ஆலயம் கட்டுவதற்கு இக் கலைஞரின் சேவை அவசியம்.

(தொடரும்)

# மில்லரின் காலநிலைப் பாகுபாடு

( 7 காலநிலை வகைகளும் 18 துணைப் பிரிவுகளும் )

தொகுப்பு:
திரு. எஸ். பாலச்சந்திரன் M.Sc.
சிரேஷ்ட விரிவுரையாளர், புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மில்லரின் காலநிலைப் பாகுபாட்டுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சில காரணிகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன.

நேரடியான காரணிகள்:- சராசரி வெப்பநிலை, சராசரி மழைவீழ்ச்சி ஆகியவையும் தன்விச்சையான சமன்பாடும்.

மறைமுகமான காரணிகள் :- காற்றுநிலை, அழக்கநிலை, ஈரப்பதன் நிலை, வரட்சிநிலை, தாவர நிலை ஆகியனவும் தாவர, பயிர்வளரும் காலமும்

**A வெப்பக் காலநிலைகள்**

வருடம் முழுக்க வெப்பம் உடையது. எந்த மாதத்திலும் 64 பாகை பரனேட் வெப்பத்திற்கு குறையாமல் பெறப்படும்.

(A1) மத்திய கோட்டுக் காலநிலை இரண்டு பருவத்தில் ஆகக்கூடிய மழையைப் பெறும் பிரதேசங்கள்.

(A1M) மத்தியகோட்டு பருவக்காற்றுக் காலநிலை. பருவக்காற்று அல்லது மொன்சூன் காற்றுப் பிரதேசங்கள்.

(A2) கடலுக்குரிய அயனக் காலநிலை. உண்மையான வரண்ட பருவம் இல்லாத பிரதேசங்கள்.

(A2M) கடலுக்குரிய அயனப் பருவக்காற்றுக் காலநிலை. பருவக்காற்று ஆதிக்கம் உடையது.

(A3) கண்டத்துக்குரிய அயனக் காலநிலை கோடைகால மழைவீழ்ச்சி கொண்டது.

(A3M) கண்டத்துக்குரிய அயனப் பருவக்காற்றுக் காலநிலைகள். பருவக்காற்று ஆதிக்கமுடையது.

**B இளஞ்சூடான இடைவெப்ப அல்லது அயன அயல் காலநிலைகள்.**

எந்தமாதமும் 43 பாகை பரனேட்டுக்கு வெப்பத்தைப் பெறுவதில்லை. குறிப்பிடத்தக்க குளிர்பருவம் இல்லை.

(B1) மேற்குக்கரைக் காலநிலை அல்லது மத்தித்தரைக் காலநிலை. மத்திப் பருவ மழை உடையது.

(B2) கிழக்குக்கரைக் காலநிலை. வருடம் முழுக்கப் பங்கிடப்பட்ட மழை உண்டு.

(B2M) கிழக்குக்கரைப் பருவக்காற்றுக் காலநிலை. பருவக்காற்றுடைய பிரதேசம். கோடைப்பருவத்தில் ஆகக்கூடிய மழை உண்டு.

**C குளிர்மையான இடைவெப்ப காலநிலைகள்.**

1- 5 மாதங்கள் 43பாகை பரனேட்டுக்கு குறைவாகப் பெறும் பிரதேசங்கள் அடங்கும்.

(C1) கடலுக்குரிய காலநிலை. பங்கிடப்பட்ட மழை அல்லது மாரிப்பருவத்தில் ஆகக் கூடிய மழைவீழ்ச்சியைக் கொண்ட பகுதிகள்.

(C2) கண்டத்துக்குரிய காலநிலை. கோடைப்பருவத்தில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சி உண்டு.

(C2M) கண்டத்துக்குரிய பருவக்காற்றுக் காலநிலை. கோடையில் மிகவும் ஆகக்கூடிய மழைவீழ்ச்சி.

**D குளிர் காலநிலைகள்**

6 – 9 மாதங்கள் 43பாகை பரனேட்டுக்கு குறைவாகப்பெறும் பிரதேசங்கள். நீண்ட குளிர் பருவம் உடையவை.

(D1) கடலுக்குரிய காலநிலை. பங்கிடப்பட்ட மழை உண்டு. அல்லது

புவியியல்

மாரிப்பருவத்தில் ஆகக் கூடிய மழைவீழ்ச்சி உண்டு.

D2 கண்டத்துக்குரிய காலநிலை கோடைப் பருவத்தில் ஆகக்கூடிய மழைவீழ்ச்சி.

D2M கண்டத்துக்குரிய பருவக்காற்று காலநிலை. மிகவும் ஆகக் கூடிய மழையை கோடைப்பருவத்தில் உடையது

**F ஆட்டிக் காலநிலைகள்**

மிகக் குறுகிய இளஞ்சூடான வெப்பப் பருவத்தைக் கொண்டவை. மூன்று மாதங்களுக்கும் குறைவான காலம் 43 பாகை பரனேட்டுக்கு குறைவான வெப்பம்

[ 7ஆம் பக்கம் பார்க்க ]




# யாழ்ப்பாணக் குடாநாட்டில் செறிந்து காணப்படும் சுண்ணக் கற்பாறைகள்

★ த. குணசேகரம் ★
[ நீரியல், புவிச்சரிதவியலாளர் ]

புவிச்சரித வரலாற்றுக் காலத்தில் ஏறத்தாழ இருபத்தைந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு நிலவியதாகக் கருதப்படுகின்ற மயோசின் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு கடல் பகுதியிலிருந்து மேலுயர்த்தப்பட்டது. கடல் பகுதியினுள் படிவு செய்யப்பட்ட பல்வேறு அடையல்களும் ஆழமற்ற பகுதிகளிலிருந்து உயிரினங்களின் சேதனவுறுப்புகளும் மேலுயர்த்துகையின்பின் கரைசல்பட்டு இறுதி சுண்ணும்புக் கற்பாறைகளாயின.

இவ்வாறு தோன்றிய சுண்ணும்புக் கற்பாறை குடாநாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வேறுபட்ட தன்மையுடையதாகவும், வெவ்வேறு ஆழத்திலும் காணப்படுகின்றது இதுவரை குடாநாட்டின் பல பகுதிகளின் மேற்பரப்பிலும்.ஆராய்ச்சிக்காக இடப்பட்ட துளைகளின் மூலமும், குழாய்க்கிணறுகளை அமைப்பதற்குத் துளையிடப்பட்ட போதும் பெறப்பட்ட மாதிரிகளையும் அடிப்படையாகக் கொண்டு, இங்கு காணப்படுகின்ற சுண்ணும்புக் கற்பாறையினை முருகைக் கற்பாறைத் தன்மையினைக் கொண்ட சுண்ணும்புக் கற்பாறை என்றும் (Coralline limestone) மக்கித் தன்மையுடைய உலர்ந்த சுண்ணும்புக் கற்பாறை என்றும் (Chalky limestone), மணல் தன்மை கூடிய (silica content) வைரச் சுண்ணும்புக் கற்பாறை என்றும் (cherty limestone) மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். குடாநாட்டின் வடபகுதியில் சுண்ணும்புக் கற்பாறைகள் உயர்த்தப்பட்ட நிலையிலும் தெற்காகவும், தென்மேற்காகவும்சாய்ந்தும் காணப்படுகின்றன. இப்பாறைகள் குடாநாட்டின் சில பாகங்களின் ஏறத்தாழ 350 அடி தொடக்கம் 450 அடி ஆழம்வரை அமைந்துள்ளதாக அறியப்பட்டுள்ளது. இவை தோன்றிய முறையில் வெவ்வேறு அடையல்களாகவும், அதில் அமைந்துள்ள உயிரின சேதனவுறுப்புகளின் காரணமாகவும், இடத்துக்கிடம் வேறுபட்ட சேர்க்கையினுல் வேறுபட்ட அளவில் நுண்துளைமையைக் கொண்டுள்ள பாறையாகவும், அதற்கேற்ப நீரை உட்புகவிடக்கூடிய தன்மையுடையதாகவும், இருக்கின்றது. அத்துடன் இது நீரில் கரையும் தன்மையைக் கொண்டிருப்பதால் குடாநாட்டின் மேற்பரப்பின் கீழ் இப்பாறைகள் கரைந்து, மூட்டுகளும், வெடிப்புகளும், பிளவுகளும் தோன்றியிருப்பதுடன் நீர் தேங்கி நிற்கக் கூடிய குகைகளையும், இடைவெளிகளையும் கொண்டமைந்துள்ளது.

ஊடுபுக விடக்கூடிய சுண்ணும்புக் கற்பாறையினூடாக நீர் கீழ் நோக்கிக் கசிந்து இத்தகைய இடைவெளிகளினூடே தேங்கி நீர்த்தாங்கு படுக்கையாக அமைந்துள்ளது. இக்குடாநாட்டில் வருடத்தில் குறிப்பாக இருமாதங்களில் மழைவீழ்ச்சியினுல் பெறப்படுகின்ற நீரின் ஒருபகுதியே கீழ் நோக்கிக் கசிந்து நிலநீராக அமைந்து காணப்படுவதுடன், இதுவே இக்குடாநாட்டு மக்களின் வாழ்வின் உயிர் நாடியாகவும் விளங்குகின்றது. அதாவது இப்பகுதில் வாழும் மக்களின் சீவனுேபாயத்தினை நிர்ணயிப்பதில் நில நீரும் அதற்கு மூலாதாரமான சுண்ணும்புக் கற்பாறையின் முக்கியத்துவமும் அளப்பரியது.

**சுண்ணும்புக் கற்பாறையினுல் பெறப்படும் பலாபலன்கள்.**

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் சுண்ணும்புக் கற்பாறையைக் கொண்டிருக்கின்ற போதிலும், சுண்ணும்புக் கல் அமைந்து காணப்படுகின்ற முறையும், அதன் தன்மையும் வேறுபட்ட இழையமைப்பும் இதன் பயன்பாட்டில் சில வரையறைகளை ஏற்படுத்துகின்றன. ஏற்கனவே கூறப்பட்டிருப்பது போல் மூன்று வகையான சுண்ணும்புக் கற்பாறை இங்கு காணப்படுகின்ற போதிலும் இதில் மணல் தன்மை கூடிய பளிங்குருவாக்கம் பெற்ற வைரச் சுண்ணும்புக்கல்லே பயன்பாட்டைப் பொறுத்த வரையில் பெருமளவு முக்

## திட்டமிடப்படாத அகழ்வால் நில, நீர்வள பாதிப்பு அபாயம்

கியத்துவத்தைப் பெறுவதுடன் பெருமளவு பலாபலன்களும் இதன்மூலமே பெறப்படுகின்றன.

துரதிர்ஷ்டவசமாக, இச் சுண்ணும்புக் கற்பாறை வெட்டி எடுக்கக் கூடியவகையில்குடாநாட்டின்மொத்த நிலப் பரப்பில் ஏறத்தாழ 25 வீத மான பகுதியில் மட்டுமே காணப்படுகின்றது இதிலும் பெரும் பகுதி வடக்கு, கிழக்கு வலிகாமம் பகுதியிலேயே காணப்படுகின்றது. இதில் ஏறத்தாழ 80 வீதமான பகுதி ஏற்கனவே வெட்டி எடுக்கப்பட்டு, இப்பாகங்கள் செறிவான பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இத்தகைய சுண்ணும்புக் கற்பாறைகள் வெளியரும்பிக் காணப்படுகின்ற இப்பாகங்கள் இலங்கையிலேயே மிகச் [illegible] கொண்டிருப்பதுடன் (செம்மண்) சிறந்த தரமான நில நீரையும் வருடம் முழுவதும் கிடைக்கக் கூடியதாகக் கொண்டுள்ளது. இத்தகைய சிறந்த உள்ளார்ந்த பயிர்ச் செய்கை வளத்தினைக் கொண்ட இப்பகுதியில் சுண்ணும்புக் கற்பாறைகள் மேற்பரப்பிலிருந்து இரண்டு மூன்று அடி ஆழத்திற்கே வெட்டி எடுக்கப்பட்டுள்ளது, இவ்வாறு வெட்டி எடுக்கப்பட்ட கற்பாறைகள் தெருக்களை அமைப்பதற்கும் அவற்றினை செப்பனிடுவதற்கும், வீடுகள், கட்டடங்கள் கட்டுவதற்கும் பயன் படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வகையில் இக்குடாநாட்டில் சுண்ணும்புக் கற்பாறை அமைந்து காணப்பட்ட பாகங்களுள் புன்னலைக்கட்டுவன் வடக்கு, வயாவிளான், கைதடி, [illegible] தெற்கு, [illegible], [illegible], பலாலி, அச்சுவேலி, ஊரெழு, கோப்பாய், ஈவினை, நீர்வேலி, நவக்கிரி, விளான், மாதகல், கோண்டாவில், உரும்பராய், திருநெல்வேலி, கைதடி, வளலாய், இடைக்காடு, மட்டுவில் வடக்கு என்பன குறிப்பிடத் தக்கன. இவற்றுள் பெரும்பாலான பாகங்களுள் வெளியரும்பிக் காணப்பட்ட சுண்ணும்புக் கற்பாறைகள் வெட்டி எடுக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு விட்டதுடன் இப்பாகங்கள் பயிர்ச் செய்கை நிலங்களாகவும் மாற்றப்பட்டுள்ளன.

இக்குடா நாட்டில் அமைந்து காணப்படுகின்ற சுண்ணும்புக் கற்பாறை உயிரின சேதனவுறுப்புக்களை உள்ளடக்கியிருப்பதனுல் நுண்டுளைமையைக் கொண்டுள்ளதுடன் இதன் காரணமாக மழை வீழ்ச்சியினுல் இடைக்கப்பெறும் நீரின் ஒரு பகுதி நில நீராகத் தேங்கியிருப்பதற்கு உதவுகின்றது. இந்நில நீர் சுண்ணும்புக் கற்பாறையிலுள்ள கரைசல் பள்ளங்களினுள்ளும் தரைக் கீழ்க் குகைகளினுள்ளும், விழுங்கு துவாரங்களினுள்ளும் தேங்கி நீர்த்தாங்கு படுக்கையாக அமைந்துள்ளது. மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் சுண்ணும்புக் கற்பாறைகள் வெளியரும்பிக் காணப்படுகின்ற பாகங்கள் இவற்றின் இயல்பின் காரணமாகவும், இப்பாகங்களின் மெல்லிய மண்படையின் காரணமாகவும் மழையினுல் பெறப்படும் நீரை இலகுவாகவும், விரைவாகவும் கீழ் நோக்கிக் கடத்தி நில நீர்த்தாங்கியின் இருப்பினை அதிகரிப்பதற்கு உதவுவதுடன், மேற்பரப்பு நீர் கடலை நோக்கி வெளியேறுவதையும் குறைக்கின்றது.

இவ்வாறு நிலநீர் தேங்கிப் பயன் பாட்டுக்குக் கிடைக்கக் கூடியதாக இருப்பதனுலேயே இக்குடா நாட்டில் வாழும் மக்கள் குடிக்கும் நீர், பல்வேறு வீட்டுத் தேவைக்கான நீர், பயிர்ச் செய்கைத் தேவைக்கான நீர் மற்றும் கைத்தொழில் போன்றவற்றுக்கான நீர்த் தேவைகளையும் வருடம் முழுவதும் பெறக்கூடியதாயிருக்கின்றது. இது இக்குடா நாட்டிற்கு இயற்கை அளித்த ஒரு கொடையாகும்'

சீமெந்து உற்பத்தியில் சுண்ணும்புக் கல் அடிப்படை மூலப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

பெருந்தெருக்களை அமைப்பதற்கும் ஏனைய போக்குவரத்துப் பாதைகளை அமைப்பதற்கும் செப்பனிடுவதற்கும் சுண்ணும்புக் கல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

வீடுகளையும், கட்டடங்களையும் கட்டுவதற்கு சுண்ணும்புக் கல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

மேற்கூறிய பலாபலன்கள் கூடுதலாக மணல் தன்மை கூடிய வைரச் சுண்ணும்புக் கற்பாறைகளிலிருந்தே பெறப்படுகின்றது. பல்வேறு தேவைகளுக்கான சுண்ணும்பு உற்பத்தி முருகைக்கற்பார் வகையைச் சேர்ந்த சுண்ணும்புக் கல்லிலிருந்து பெறப்படுகின்றது.

( தொடரும் )




**எரிவாயு**

திரு. சி. அம்பிகாவரன் எழுதிய எரிவாயு சம்பந்தமான கட்டுரையின் இரண்டாம் பகுதி அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும். இதனை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹிந்திப் படவுலகம் நடிகைகளை வா, வா என்று அழைக்கிறது

## ஆனால் நடிகர்களோ பாவம்.......

திரைப்பட உலகில் "எந்தச் சூழ்நிலை"க்கும் வளைந்து கொடுக்கக் கூடியவர்கள் தான் தென் இந்திய நடிகைகள்.

அதனால்தான் வட இந்தியப் படவுலகம் தென் இந்திய நடிகைகளை வா, வா என்று வரவேற்கிறது.

ஹிந்திப் படவுலகில் கொடிகட்டிப் பறக்கும் தமிழ் நடிகை ஹேமமாலினி இப்படிக் கூறுகிறார்.

வட இந்தியப் படவுலகில் தென் இந்திய நடிகைகள் பெரும் புகழ் பெறுகிறார்கள் வரவேற்புக்கிடைக்கிறது

இவை தென்னிந்திய நடிகர்களுக்கு ஏன் கிடைப்பது இல்லை?

இது படவுலகில் பெரும் கேள்வியாக எழுந்துள்ளது.

தென் இந்திய நடிகர்கள் நடிக்கும் ஹிந்திப் படங்கள் ஒன்று, இரண்டு தோல்வி கண்டால் போதும். அந்த நடிகர்களின் மார்க்கட் போய் விடுகிறது.

ஆனால் தென் இந்திய நடிகைகளின் நிலை அப்படி அல்ல. தொடர்ந்தும் ஹிந்திப் படவுலகை ஆக்கிரமிக்கக் கூடியதாக உள்ளது.

தென் இந்தியாவில் இருந்து சென்று ஹிந்திப்பட உலகில் கொடி கட்டிப் பறந்த முதல் தமிழ் நடிகர் ரஞ்சன் தான்.

சந்திரலேகா, நிஷான் ஹிந்திப் படங்களில் தமிழ் நடிகைகளுடன் நடித்தார்.

இறுதியில் ஹிந்திப் படவுலகு அவரை ஒதுக்கியது அந்த அதிர்ச்சியில் இருந்து அவர் மீள முடியாமல் பம்பாயில் தனது மனைவியுடன் இறுதிக் காலம்வரை கழித்தார்.

சிவாஜி கணேசனும் ஹிந்திப்படங்களான ஸ்கூல் மாஸ்டர், தர்த்தி ஆகியவற்றில் நடித்தார். ஆனால் ஹிந்தி நடிகர் முன்னால் சோபிக்க முடியாது போயிற்று.

காதல் மன்னன் ஜெமினி கணேசனும் மிஸ்மேரி, தேவ்தா ஹிந்திப் படங்களில் நடித்தார். பின்னால் அவர் அதைத்தொடர முடியவில்லை.

இந்த நிலையில்தான் கமலஹாசனும் ரஜனிகாந்தும் ஹிந்திப்படவுலகுக்குச் சென்றுள்ளனர். அவர்களின் நிலை என்ன ஆகுமோ?

நடிகைகளை 'வா,வா'' என்று அழைக்கும் ஹிந்திப்படவுலகம் நடிகர்களைக் கைவிட்டுவிடுகிறது. ஐயோ பாவம்!

## தோல்வி என்ற...

[3-ஆம்பக்கத் தொடர்ச்சி]

வியக்குமெனப் புலவர் குமரனார் புகழ்கிறார்.

இவ்வீரக் காட்சியை விவரிக்கும் 167-ஆம் புறநானூற்றுப் பாடல் இதுதான்:

நீயே, அமர்காணின் அமர் கடந்து அவர்
படைவிலக்கி எதிர் நிற்றலின்
வாஅள் வாய்த்த வடு வாழ் யாக்கையொடு
கேள்விக்கு இனியை கட்கு இன்னாயே
அவரே, நிற்காணின் புறங்கொடுத்தலின்
ஊறு அறியா மெய்யாக்கையொடு
கண்ணுக்கு இனியர் செவிக்கு இன்னாரே
அதனால்,
நீயும் ஒன்று இனியை அவரும் ஒன்று இனியர்
ஒவ்வா யாவுள மற்றே வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடுமான் கிள்ளி
நின்னை வியக்கும் இவ் வுலகம் அஃது
என்னோ பெரும உரைத்திசின் எமக்கே.

## மில்லரின்..

(6ஆம்பக்கத்தொடர்ச்சி)

உடையது.

E1 பனிக்கால நிலை. எப்போதும் குளிர் உடைய பகுதி. வருடம் முழுக்க 43 பாகை பரனைட்டுக்குக் குறைவான வெப்பம் உடையது.

### F வரட்சிக் காலநிலைகள்.

R (in) – 1/5 பாகை பரனைட் சமன்பாடு அடிப்படையானது.

(வெப்பத்திற்கு (F) 1/5 பங்கிலும் குறைவாக மழைபெறும் (அங்குலத்தில் பகுதிகள் இப்பிரிவில் அடங்கும்.)

உ-ம் வரட்சி எல்லை. பெறப்படும் வெப்பம் 59 பாகை பரனைட் பெறப்படும் மழை 12 அங்குலம்

ஆகவே வரண்ட பகுதி என முடிவு செய்யப்படும்

(F1) வெப்ப வரட்சிப் பிரதேசம் குளிர் பருவம் இல்லை. எந்தமாதமும் 43 பாகை பரனைட்டுக்குக் குறைவாகப் பெறுவதில்லை.

F2 குளிர் வரட்சிப் பிரதேசங்கள் குளிர் பருவம் உடையது. ஏதாவது ஒரு மாதம் அல்லது மாதங்கள் 43 பாகை பரனைட் வெப்பத்திற்குக் குறைவாகப் பெறும்.

## வெள்ளித் திரை

தயாரிப்பு : பேரின்பம்

### ரேவதி - சுஜாதா திடீர் சந்திப்பு

அது ஒரு மருத்துவமனை — தனக்கு வேண்டப்பட்ட ஒருவர் அங்கு சேர்க்கப் பட்டுஇருந்தார். அவரைச் சந்திப்பதற்கு ஓர் இளம் பெண் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக வருகிறார்.

ஆனால் வந்த இடத்தில் அவளுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருக்கிறது. எதிர்பாராத அதிர்ச்சி.

அவள் யாரைச் சந்திக்க வந்தாளோ அவரையே அவளது தாயும் சந்திக்க வந்திருக்கிறார். தாயும் மகளும் அதிர்ச்சியில் என்ன பேசுவது என்று புரியாமல் தவிக்கிறார்கள்.

இப்படி ஒரு காட்சி ஏ. வி. எம். ஸ்டுடியோ மருத்துவமனை செட்டில் படமாககப்பட்டது.

தாயாக சுஜாதாவும் மகளாக ரேவதியும் நடித்தனர். இக்காட்சி இடம்பெறுவது "ரேவதி" படத்தில்.

பிரபல டைரக்டர் கே. விஜயனின் மகன் சுந்தர். கே. விஜயன் படத்தை இயக்குகிறார்.

இளைய இயக்குநர்சுந்தரின் முதல் படம் இது. படத்தை விறுவிறுப்புடன்படுவேகமாக இயக்கிக் கொண்டிருக்கிறார்.

'ரேவதி'யின் வெற்றி அவர் கைகளில் தான் தங்கியிருக்கிறது.



ரேவதி

### ரேவதியின் விருப்பம்

இன்று புகழ்பெற்ற நடிகையாகத் திகழுகிறார் ரேவதி. என்றாலும் அவர் சிறந்த நடனமணி என்று பெயர் பெறத்தான் அதிகமாக விருப்புகிறார்.

"நடனம் என்பது தெய்வீகமானது. அதை சிரத்தையுடன் செய்யவேண்டும். ஏனோ தானோ என்று இருக்கக் கூடாது'' என்கிறார் ரேவதி.

### சிறை..:

(4 ஆம் பக்கத்தொடர்ச்சி)

தோர் கந்தோர் என்று திரிவாள். இண்டைக்கு சென்றாலும் இஞ்சை வந்து கூட மாட அலுவலைப் பார்த்தால் குறைஞ்சு விடுவாளோ?

'அவள் ஏதோ படிக்கிறாள் போலை கிடக்கு! இஞ்சை வேலை எல்லாம் முடிஞ்சுது தானே'

திலகம் தங்கைக்காக பரிந்து வந்தாள்.

### சீன...

(3 ஆம் பக்கத்தொடர்ச்சி)

உற்பத்தி முறை ஊக்குவிக்கப்படுகிறது.

அத்துடன் 'சுயசார்பு' என்ற மாவோவின் கொள்கையக் கைவிட்டு மேலும் மேலும் மேற்கத்தைய கொள்கைகளை அனுஷ்டிக்கிறார்கள்.


''பூனை கறுப்பாயிருந்தால் என்ன வெள்ளையாய் இருந்தால் என்ன எலி பிடித்தால் போதும்'' என்ற மாக்சிஸ விரோத தத்துவங்களை இன்றைய சீனத்தலைவர்கள் பேசுகின்றார்கள்.

இன்றைய தலைவர்கள் மாசேதுங்கின் கொள்கைகளை விரோதித்து அவற்றின் இடத்தில் முதலாளித்துவ கொள்கைகளைப் புகுத்துகின்றார்கள்.

செவ்வி: வரன்

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 4



அனுப்புபவர் பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

..............................

கையெழுத்து:- ..............................

**இடமிருந்து வலம்:**

1. சோம்பல்
6. அமர்வது
7. வெட்டு
8. பக்கச்சார்பின்மை
9. ஞானிகள் செய்வது
11. திடமாக வகுக்கப் பட்டது
13. இராஜ வம்சம்
14. தப்பிதம் -
17. புத்தகத்தின்அங்கம்
18. கவிதைக்கு வேண்டுவது
19. சாதுவானது
21. நிறம்
22. கண்ணாடியில் தெரிவது

**மேலிருந்துகீழ்:**

1. குறுமுனி
2. மறைவில் திட்டமிடுவது
3. காட்டில் காணலாம்
4. செடியின் பகுதி
5. வழிமுறை
7. காப்பிய நாயகி
8. உலகமே இதில் தான்செயற்படுகிறது
10. எது
12. முன்னிருந்து பார்த்தாலும் பின்னிருந்து பார்த்தாலும் ஒன்று
15. கூட்டுதல்
16. வரவேற்பு வைபவத்தில் முதலிடம் வகிப்பது
17. சிலை
18. சாணம்
20. செயலைத்தொடங்க தேடும் நேரம்

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.
3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 4, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
7. த ஷப்ரு-உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பிறின்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

போட்டி இலக்கம் 2 இற்கான விடைகள் வருமாறு:-

**மேலிருந்து கீழ்:-**

1. மமதை
2. காலைப்பொழுது
3. கரு
4. என்பு
6. தம்
7. மகுடி
9. ~~கடுகு~~
10. சகுந்தலை
11. குடி
14. கசாப்பு
15. அன்பு
18. தப்பு
19. களி

**இடமிருந்து வலம்:-**

1. மகாத்மா
2. மலை
3. தருமன்
8. தைப்பூசம்
11. குபு
12. பொடுகு
13. குடி
14. கழு
16. சாது
17. தங்குதல்
19. கலை
20. மப்பு
21. புள்ளி
22. அம்பு

### சொற்சிலம்பம் போட்டி இல. 2

வெற்றி பெற்றவர்கள் விவரம்:-

முதலாம் இடம்:- பொ. சரச்சந்திரன், உரும்பராய் தெற்கு, உரும்பராய்.

இரண்டாம் இடம்:- பி. சுமதி, வி. எச். லேன், இருபாலை, கோப்பாய்.

மூன்றும் இடம்:-வி. தேவராஜா, சேயிடை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

## செய்திக்கொத்து

(பெப் 7- பெப் 13)

**வெள்ளி:**

- ஊர்காவற்றுறையில் ஒரு தமிழ் இளைஞர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி, தொண்டமானாறிலும் மோதல்.
- மாவிப்பாயில், காரைநகரில்பேரணிகள்.
- போராளிகளை எதிர்கொள்ள படைகள் தயார் - லலித் தகவல்.

**சனி:**

- மாலைதீவில் பிரதமர் ராஜீவைச் சந்திக்க அமைச்சர் லலித்துக்கு அனுமதி மறுப்பு.
- திருமலையில் 42 தமிழ் இளம் பெண்கள் கைது.
- பருத்தித்துறையில் நேரடிச்சமர்.
- நெல் மூடைகள் படையினரால் பரந்தனில் பறிமுதல்.

**ஞாயிறு:**

- இந்திய முயற்சியில் அக்கறை இல்லையா? -இலங்கையின் நேரடிப் பதில் தேவை - இப்படி பிரதமர் ராஜீவ் மாலைதீவில் அறிவிப்பு.
- அலன் தம்பதிகள் மாத இறுதியில் இலங்கை வருவர்; தமிழர் பிரச்சினை பற்றி ஜே.ஆருடன் பேச.
- மூதூரில் கைதான இளம் பெண்களில் ஒருவருக்கு சித்தப்பிரமை.

**திங்கள்:**

- வவுனியாவில் காரோடு மூன்று தமிழர் எரிப்பு.
- புதிய யோசனை சமர்ப்பிக்கும்படி இந்தியா கோரிக்கை.
- சுன்னாகத்தில் மாபெரும் பேரணி.

**செவ்வாய்:**


- மின்கம்பம்முறிந்து சிறுமி மரணம்.
- பிரார்த்தனை இயக்கம் ஒத்திவைப்பு.
- இந்திய முயற்சிக்கு முழு ஆதரவு - இலங்கை அறிவிப்பு.

**புதன்;**

- பாலைதீவுக் கடலில் படகுகள் மீது சூடு!
- சுயாட்சியை உள்ளடக்கிய பதில் வேண்டும் என்று இந்தியா விருப்பம்.

**வியாழன்;**

- 165 மைல் கடற்பகுதி பாதுகாப்பு வலயம் - பருத்தித்துறை முதல் கோமாரி வரை.
- வவுனியா, பூவரசங்குளத்தில் நான்கு தமிழர் பலி.
- பிரிட்டிஷ் பெண்ணை விடுவிக்க [illegible] யும் என்று அறிவிப்பு.

இந்த அவல நாட்களிலும்...
அசையாது நின்று ஒவ்வொருநாளும்
இரவு பகல் இருபத்துநான்கு மணி நேரமும்
சோராதிருந்து, மெய்வருந்தி, கண்துஞ்சாது கருமம் ஆற்றுகிறோம்.

உங்களுக்கு வேண்டிய ரெலிபோன் அழைப்புக்களை
எந்நேரமும் எந்நாளாயினும்
தங்கு தடையின்றிப் பெற்றுத் தருகிறோம்.
பாதுகாப்பான இடம். அச்சம் வேண்டாம்,

# ரெலிகுளோப்

ரெலிபோன் சேவையாளர்கள்,
ரெலிபோன் விற்பனையாளர்கள்

ஆர். ஜி. கட்டடம் - முதல்மாடி,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

ரெலிபோன்: 25088 (ஆறு தொடர்கள்)


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

சமுத்திரா மல்ரி சேவிசஸ்
* திருமண சேவை
* காணி வாங்கி விற்கும் சேவை
* உள்ளூர் உற்பத்திச் சேவை
* கட்டட ஒப்பந்தம்
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
(கோண்டாவில் சந்தி)
303, பலாலி வீதி, கோண்டாவில்.

# சஞ்சீவி

15.02.1986

சமுத்திரா மல்ரி சேவிசஸ்
* மின்சார உபகரணச் சேவை
* வீடியோ புகைப்படச் சேவை
* திருமண ஒழுங்குகள்
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
கிளைகள்:
முருகமூர்த்தி லேன், நெல்லியடி-கரவெட்டி.
கே.கே.எஸ். வீதி, தெல்லிப்பளை.

# 'தர்மிஷ்டம்' என்றால் தம் 'இஷ்டம்' ஆகுமா?

## இணைப்புக்கு எதிராக அன்றும் இன்றும் வெவ்வேறு காரணங்கள்

() குறுமுனி ()

பிரிவினையை எதிர்ப்பதாகக் கூறும் தர்மிஷ்ட ஜனாதிபதி, இணைப்பையும் எதிர்க்கிறார்.

சிந்தனை, இரு துருவங்களாகச் செயற்படுகிறது.

இணைப்பை எதிர்ப்பதற்கான காரணங்களும் இரு துருவங்களாக அமையவேண்டுமா?

1957இல் எழுதப்பட்ட பண்டா– செல்வா ஒப்பந்தம் வடக்கு – கிழக்கு இணைப்புக்கு வழி வகுத்தது.

அதன் மூலம் இரண்டு இனங்கள் இணைந்து வாழவும் வாய்ப்பு ஏற்பட்டது.

இதை எதிர்த்து அன்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. ஜெயவர்த்தன 'யாத்திரை' கிளம்பினார்.

### பிரிவினைக்கு வித்திட்டவர்

கண்டி நோக்கி வந்த அவரது யாத்திரை இம்புல் கொடையில் வைத்து குழப்பப்பட்டது.

அத்தோடு பண்டா–செல்வா ஒப்பந்தமும் கிழிக்கப்பட்டது.

இணைப்பைக் குழப்பப் போய் பிரிவினைக்கு வித்திட்ட பெருமையும் அவருக்குக் கிடைத்தது.

1957 இல் இணைப்பை எதிர்க்கக் கூறப்பட்ட காரணம் என்ன?

1983க்குப் பின்னர் கூறப்படும் காரணம் என்ன?

இவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டிய தருணம் வந்துவிட்டது.

### 1983 காரணம்

இன்று ஜனாதிபதியும் அவரின் "பரிவாரங்களும்" பின்வருமாறு கூறுகின்றனர்:

"வடக்குடன் கிழக்கை இணைக்க முடியாது; சிங்களவரும் முஸ்லிம்களும் சேர்ந்து தமிழர்களை விட கிழக்கில் பெரும்பான்மையாக உள்ளனரே! அவர்கள் இணைப்பை எதிர்க்கிறார்கள். கிழக்கில் பெரும்பான்மையான எம்.பிக்கள் எம்கட்சியில் இருக்கின்றார்கள்"

இதைத்தான் 1957 இலும் ஜனாதிபதி சொன்னாரா? இல்லையே!

### 1957 காரணம்

"வடக்கையும் கிழக்கையும் இணைத்துக் கொடுத்தால் தமிழருக்கு ஒருநாடு கிடைத்துவிடும். அந்த நாடு இப்படி இருக்கும்" - இப்படி இலங்கை வரைபடத்தில் கோடிட்டுக் காட்டியபடி கண்டிக்கு யாத்திரை புறப்பட்டார், அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான இன்றைய ஜனாதிபதி.

1983க்குப் பிறகு கூறும் காரணத்தை 1957 இல் திரு ஜெயவர்த்தன ஏன் கூறவில்லை?

1957 இல் கிழக்கு மாகாணத்தில் சிங்களவரும் முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையாக இல்லையா?

ஆம் நிச்சயமாக இல்லைத்தான்.

### 1957இல் கிழக்கு

தமிழரும் முஸ்லிம்களும் தான் அப்பொழுது கிழக்கிலே பெரும்பான்மையாக இருந்தனர்.

1956 பொதுத் தேர்தலில் திருமலையில் திரு. ந. இ. இராசவரோதயம், கல்குடாவில் திரு. பொ. மாணிக்கவாசகர் மட்டக்களப்பில் திரு. செ. இராசதுரை, கல்முனையில் கேட முதலியார் காரியப்பர், பட்டிருப்பில் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ஆகியோர் தமிழரசுக் கட்சி எம்.பிக்களாகத்தான் இருந்தனர்.

மூதூர் எம். பி யாக ஜனாப் முஹம்மதலி (சுயேச்சை) இருந்தார்.

1957இல் கிழக்கு மாகாணத்தில் பட்டிப்பளை தான் இருந்தது. இங்கினியாகலை – சேனநாயக சமுத்திரம் வரவில்லை. மாதுறு ஓயா, அம்பாறை மாவட்டம் வரவில்லை. அம்பாறை என்னும் தொகுதியே இல்லை.

திருகோணமலையில் அல்லை இல்லை. மொரவேவா இல்லை. கந்தளாய்க் குடியேற்றம் இல்லை. கல்மெட்டியாவக் குடியேற்றம் இல்லை. பதவியா கிடையாது. சேருவில இல்லை

ஒரு சிங்களவர் தானும் கிழக்கு மாகாணத்தில் இருந்து நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்படவும் இல்லை.

ஏன் இன்றைய ஆளும் கட்சியான யு.என்.பியில் இருந்துகூட அன்று எவரும் கிழக்கு மாகாணத்தில் எம். பியாகச் செல்லவில்லை.

கிழக்கில் அதிக எம். பிக்கள் என்பக்கம் என்று காரணம் காட்டும் திரு. ஜெயவர்த்தன, அன்று ஒரு யு.என்.பி எம். பி. தானும் இல்லாத போதும் இணைப்பை எதிர்த்தாரே!

38 ஆண்டுகளாக நடந்த அரசின் திட்டமிட்ட குடியேற்றத்தின் பின்னர்தான் சிங்களவரும் முஸ்லிம்களும் சேர்ந்து கிழக்கில் பெரும்பான்மையினர் என்று சொல்ல வைத்துள்ளது.

இணைப்புப் பற்றி முடிவு செய்ய கிழக்கிலே சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று இன்று அரசு சார்பில் கூறப்படுகிறது.

அப்படியானால் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு முதன்முதலாக எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டபோது இருந்த சனத்தொகை அடிப்படையில் தான் அந்த சர்வஜனவாக்கெடுப்பு அமையவேண்டும் என்று கேட்பதில் தவறு ஏதும் உண்டா?

1957 இலும் எதிர்ப்பு. 1983க்குப் பின்னரும் எதிர்ப்பு

1957 இல் சொன்ன காரணம் கைவிடப்பட்டு 1983இல் புதிய காரணம் வந்திருக்கிறது.

'தர்மிஷ்ட' ஆட்சியில் 'தம்மிஷ்டப்படி' நடக்கலாம் என்ற எண்ணம் போலும்!

* *

### கேட்டாரே ஒரு கேள்வி!

கூட்டணியின் மாற்று யோசனைகளுக்கான பதில், இறுதியில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலியின் 'கைபட்ட' பின்னர் தான் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டதாம்.

இது எல்லோரும் அறிந்த உண்மை.

திரு. லலித் அத்துலத்முதலியின் 'கைபட்டால்' பதில் எப்படி இருக்கும்?

இதை தமிழர் விடுதலைக் கூட்டணியினர் நன்கு அறிந்து வைத்துள்ளனர்.

1984 முழுவதும் நடந்த சர்வகட்சி மாநாட்டில் 'பூரணமாக'க் கலந்து கொண்டதால் கூட்டணியினர் பெற்ற 'அனுபவங்க'ளில் இதுவும் ஒன்று.

அடிப்படைத் திட்டம் எதுவும் இல்லாமல், அதிகாரப்பரவலாக்கல் பற்றி நடந்த சர்வகட்சி மாநாடு ஏதோ ஒரு வழியாக 1984 டிசம்பரில் முடிந்தது.

### உள்ளும் புறமும்

அதன் பின்னரும் கூட்டணித் தலைவர்கள் ஜனாதிபதியுடன் உத்தியோகப் பற்றற்ற முறையில் பேசிப்பார்த்தனர்.

இப்பேச்சுக்களில் ஜனாதிபதியுடன் அமைச்சர்கள் ஏ ஸி எஸ். ஹமீது, லலித் அத்துலத்முதலி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒரு கட்டத்தில் "என்ன அதிகாரங்கள், அதிகாரப்பரவலாக்கலின் கீழ் வழங்கப்பட வேண்டும் என்று கேட்கிறீர்கள்''— இப்படி கூட்டணித் தலைவர்களிடம் கேட்கப்பட்டது.

திரு அமிர்தலிங்கம் 'பைலைத் திறந்தார்' ஒரு தஸ்தாவேஜை எடுத்து முன்வைத்தார்.

ஜனாதிபதி தொடக்கம் அரச தரப்பில் அனைவரும் அதனைப் பார்த்தனர்.

ஆனால் ஒருவர் மட்டுமே வாய் திறந்து ஆச்சரியத்துடன் கேட்டார்.

"இவ்வளவு அதிகாரங்களும் உங்களுக்குத் தேவையா?''— இப்படிக் கேட்டவர் தான் அமைச்சர் லலித் அத்துலத்முதலி.

திரு அமிர்தலிங்கத்தினால் முன்வைக்கப்பட்ட தஸ்தாவேஜு வேறு ஒன்றும் அல்ல.

இந்தியாவில் மாநிலங்களுக்கு மத்திய அரசாங்கம் வழங்கிய அதிகாரங்கள் அனைத்தும் அடங்கிய பட்டியலே.

அப்பட்டியலைப் பார்த்து திகைத்து கேள்வி எழுப்பிய அமைச்சர் அத்துலத்முதலியின் 'கை', கூட்டணியின் மாற்றுயோசனைக்கான இலங்கை அரசின் 57 பக்கப் பதிலில் 'பட்டிருந்தால்' எப்படி இருந்து இருக்கும்!

* *

### 'பாவம்' போக்கும் யாத்திரை

யாத்திரை. புண்ணியம் தேடித்தான் யாத்திரை போவார்கள்.

1957 இல் நடந்தது ஒரு யாத்திரை. அது 'பாவ யாத்திரையாக' பாதியில் முடிந்தது

அந்த யாத்திரையினால் கிடைத்த பாவங்கள் தீர இன்று எத்தனையோ யாத்திரைகள் நடந்தேறிவிட்டன.

டில்லி, டாக்கா, பூட்டான், ஓமான், பஹாமாஸ் இப்படி யாத்திரைகள் நடந்தேறின.

"இறுதியில் 'மாலே'க்கும் யாத்திரை வரப்போகிறேன்'' – என்று தகவல் போனது.

"ஐயையோ வேண்டாம்! ஆளைவிட்டால் போதும் பாவம் எங்களிலும் தொற்றிவிடும்'' — என்று அடித்தாற்போல் கூறப்பட்டது.

இணைப்பை எதிர்த்த பாவம் எப்படித் திருமோ!

# ஹெக்டேயின் முடிவு ஜனநாயக மரபுக்கு கிடைத்த பெரு வெற்றி

ஹிந்தி மொழி பேசாத தென் இந்திய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியின் கோட்டையாக நீண்டகாலம் இருந்து வந்த மாநிலங்கள் கர்நாடகமும் ஆந்திராவும்.

இந்த கோட்டையை தகர்த்து எறிந்த பெருமை ராமகிருஷ்ண ஹெக்டேயையும் (கர்நாடகம்) என்.டி. ராமராவையுமே (ஆந்திரா) சாரும்.

ராமகிருஷ்ண ஹெக்டே அசல் காந்தியவாதி. ஜனநாயக மரபில் அதி நம்பிக்கை கொண்டவர்.

ராமராவும் அப்படிப் பட்டவர்தான்.

1977-ஆம் ஆண்டு மத்தியில் இந்தியாவில் பதவிக்கு வந்த மொரார்ஜி தேசாயின் ஜனதாஆட்சியின் பின்னர் ஜனதாக் கட்சி செல்லாக்காசாகி படுதோல்வி அடைந்த நிலையிலும் கர்நாடகத்தில் அதன் செல்வாக்கை வளர்த்து முதன் மந்திரி பதவியையும் எட்டிப் பிடித்தவர் ராமகிருஷ்ண ஹெக்டே.

இந்திரா ஆட்சிக்காலத்தில், ஒரு கட்டத்தில், காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் பதவிக் கவிழ்ப்புக்கள் நடந்தன.

ஆந்திராவில் ராமராவும்காஷ்மீரில் பாரூக்அப்துல்லாவும் கவிழ்ந்த போதும் அப்போதைய அரசியல் அலைக்குத் தாக்குப் பிடித்து நின்றவர் ராமகிருஷ்ண ஹெக்டே.

அப்படியான ஒரு பலமான அரசியல்வாதியை பதவி இழக்க வைத்திருக்கிறது சாராய வழக்குத் தொடர்பான ஒரு நீதிமன்றத் தீர்ப்பு.

இது கர்நாடக மாநில உயர் நீதிமன்றத்தால் கர்நாடக மாநில அரசுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பாகும்.

மாநில அரசுக்கு எதிரான தீர்ப்புக்கான முழுப் பொறுப்பையும் மாநில முதல்வர் என்ற ரீதியில்தாமே ஏற்பதாகக் கூறி ஆளுநர் பனர்ஜியிடம் தமது ராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்துள்ளார் ஹெக்டே.

இந்திய அரசியலில் ராஜீவ் காந்தியின் காங்கிரஸுக்கு எதிராக எதிர்க் கட்சிகள் மீண்டும் சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பித்துள்ள வேளையில் ராமகிருஷ்ண ஹெக்டேயின் முடிவு எதிர்க்கட்சி வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

ஜனதாக் கட்சித் தலைவர்கள் சந்திரசேகர், மது தண்டவதே ஆகியோரின் கோரிக்கைகளையும் தூக்கி எறிந்துவிட்டு தமது முடிவில் உறுதியாக நிற்கிறார் ஹெக்டே.

கடந்த ஆண்டு, மார்ச் மாதம் நடந்த இடைக்காலத் தேர்தலில் ஜனதாக் கட்சி வெற்றி பெறுவதற்கு ராமகிருஷ்ண ஹெக்டேயின் தனிப்பட்ட செல்வாக்கும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது.

ஆதலால் இவரது ராஜினாமா கர்நாடக அரசியலில் எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஹெக்டேயின் பதவி விலகலை ஜனநாயக மரபிற்குக் கிடைத்த ஒரு வெற்றியாகக் கொள்ள இடமுண்டு.

## உலக உலா

என்.பி.சீலன்

### பாப்பரசரின் இந்திய விஜயம்

1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், இந்திரா காந்தி தோல்வி அடைவதற்குக் காரணமாக இருந்தவற்றில் ஒன்று கட்டாய கருத்தடை ஆகும்.

1975 ஆம் ஆண்டுக்கும் 77 ஆம் ஆண்டுக்கும் இடையில்இருந்த "நெருக்கடி நிலை''யின்போது மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்து வந்ததும் இது தான்.

இந்த சர்ச்சைக்குரிய விடயம் பற்றி பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் தமது பத்து நாள் இந்திய விஜயத்தின் முடிவில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இந்து தீவிரவாதிகளின் கோட்டையாகக் கருதப்படும் பம்பாயில் அவர் பேசுகையில் செயற்கைக் கருத்தடை, கருச்சிதைவு ஆகியவற்றுக்கு எதிரான றோமன் கத்தோலிக்க தலைமைப்பீடத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லை என்று கூறினார்.

இந்த கருத்தடை விவகாரம் றோமன் கத்தோலிக்க திருச்சபையில் நீண்டகாலமாக இருந்து வரும் சர்ச்சைக்குரிய ஒன்று ஆகும். கத்தோலிக்க திருச்சபைக்குள்ளேயே இதற்கு ஆதரவாகவும் எதிராகவும் நீண்டகாலம் வாதப்பிரதிவாதங்கள் இருந்து வந்த போதிலும் வத்திக்கான் தனது நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தி வந்துள்ளது.

தமது இந்திய விஜயத்தின் போதும் பாப்பரசர் இதனைத் தெரிவிக்கத் தயங்கவில்லை.

உலகசனத்தொகையில் இரண்டாவது பெரிய நாடான இந்தியா 75 கோடி மக்களைக் கொண்டுள்ளது.

15 விநாடிக்கு ஒரு குழந்தை வீதம் இங்கு பிறக்கின்றது.

சனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் தன்னாலான சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இப்படியான நிலையில் பாப்பரசர் இந்தியாவில் வைத்துத் தெரிவித்த கருத்து இந்திய அரசாங்கத்துக்கு ஓரளவு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி இருக்கும் என்றே நம்பலாம்.

# மலையகம் இப்போதும் குமுறும் எரிமலைதான்!

கொழும்பு, பெப். 15

மலையகத்தில் மீண்டும் எந்நேரமும் வன்செயல் வெடிக்கலாம். குமுறும் எரிமலைபோல் இருக்கிறது மலையகம்.

மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்குவது என அரசு முடிவு எடுத்ததை அடுத்து எழுந்த உடன்பாடற்ற சூழ்நிலை இன்னும் தணியவில்லை. பதற்றம் குறைந்தது போலக் காணப்பட்டாலும் உள்ளுக்குள் இரு சமூகத்தவரும் ஒருவரை ஒருவர் தொடர்ந்து சந்தேகக் கண்களுடன்தான் பார்க்கிறார்கள்.

சில அரசியல் கட்சிகள் வன்செயல்களைத் தூண்டும் விதத்தில் பின்னுக்கு நின்று கருமமாற்றி வருவதாக வெளிப்படையாகவே கூறப்படுகிறது.

மலையகத்திற்கு சென்று திரும்பிய எமது சிறப்புச் செய்தியாளர் இப்படி எழுதுகிறார்.

முக்கிய நகரப் பகுதிகளில் நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது

எந்த நேரமும் கலவரம் வெடிக்கலாம் என்ற அச்சத்துடனேயே மலையக மக்கள் வாழ்கிறார்கள்.

### இது ஒரு செய்திக் கடிதம்

**புனித இயக்கங்களுக்கு**
**ஓர் உருக்கமான வேண்டுகோள்**

10 – 2 – 86 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பிரப்பங்குளம் வீதியில் T. G. இன் டஸ்ரீஸ் கட்டடத்தில் உள்ள எமது களஞ்சியத்திலிருந்து, எமது 30 சிறி 1094 இலக்க றோசா மினி பஸ்ஸை இனந்தெரியாதவர்கள் கடத்திவிட்டார்கள். இதனைப் புனித இயக்கங்கள் மீட்டுத் தருமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம். அல்லது இதனைச் செய்தவர்கள் உரிமை கோரும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நா. சண்முகம்
ஸ்ரீகௌரி றேடர்ஸ்
536, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷெப்ருடமர் எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியிட்ட திகதி 15 . 2 . 1986

### கருத்துக்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த கருத்தரங்கு ஒன்றில் இவ்விஷயம் வலியுறுத் தப்பட்டுள்ளது.

கிடைக்கும் தண்ணீரை விரயமாக்காதிருப்பது எவ்வளவு முக்கியமோ, அதே போன்று மழை நீரையும் விரயமாக்காது பார்த்துக் கொள்ள வேண்டும்.

எமது முன்னோர் தோண்டுவித்த கிராமக் குளங்கள் தூர்ந்து போய்க் கிடக்கின்றன. அவற்றை புனர் நிர்மாணம் செய்ய வேண்டும்.

பெய்யும் மழை வீணே கடலுக்குப் போய் விரயமாவதைத் தடுக்க வேண்டும். கிராமங்களில் ஒழுங்காக வெள்ள வாய்க்கால்களை வெட்டி, மழைநீரை வழிப்படுத்தி குளங்களில் சேமிக்க வேண்டும். அப்படிச் செய்வதன் [illegible] துக்குத் தண்ணீர்ப் [illegible] வதைத் தவிர்க்கலாம்.

### அடிக்கல் நடும் விழா

யாழ்ப்பாணம், பெப். 15

திருநெல்வேலி முத்துத்தம்பி அனாதை இல்லத்தின் வளர்ச்சிக்காக வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் உதவ முன்வந்துள்ளது.

நோர்வே நாட்டில் உள்ள றொன்டேம் லயன்ஸ் கழகம் 10 லட்சம் ரூபாவை இத்திட்டத்துக்கு உதவ முன்வந்துள்ளது.

முதல் கட்டமாக 4 லட்சம் ரூபா செலவில் நூல்நிலையம், அலுவலகம் ஆகியவற்றுக்கான அத்திவாரக்கல் நடும் வைபவம் இன்று (சனிக்கிழமை) காலை 11 மணிக்கு நடைபெறுகின்றது.

அரச அதிபர் அத்திவாரக்கல்லை நட்டு வைப்பார். உதவி அரசாங்க அதிபர்களும் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகமும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வர்.

### ஈழமுரசு ஆண்டுவிழா

யாழ்ப்பாணம்,பெப்.15

'ஈழமுரசு' இரண்டாவது ஆண்டு நிறைவு விழா நாளை (16.2 86) காலை சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் கல்லூரி முன்பாக உள்ள பாம் கோட் விடுதியில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பார்.

அன்று இரண்டாவது ஆண்டு மலரும் வெளியிடப்படும்.

மலர் வெளியீட்டுரையை பேராசிரியர் கா. சிவத்தம்பி நிகழ்த்துகிறார்.

முதல் பிரதியை ரெவ குளோப் அதிபர் திரு. ம. சிவராசா பெறுவார்.

திரு. மயில். அமிர்தலிங்கம் அதிபர் உரை நிகழ்த்துவார்.

யாழ் அரசஅதிபர் திரு. வி.எம்.பஞ்சலிங்கம், மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்துவர்.

சிறுகதைப் போட்டிகளுக்கான பரிசுகளை யாழ் அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம் வழங்குவார்.

திரு. சிவசரவணபவன் (சிற்பி)சிறப்புரை நிகழ்த்துவார்.

### வடக்கு- - - -

(1-ம் பக்க தொடர்ச்சி)

1985 இல் 1 கோடி 17 லட்சம் ரூபாதான் வருமானமாகக் [illegible] வடக்கு – கிழக்கில் நில [illegible] கள்தான் இக்குறைவுக்குக் காரணம் என்று வருமான வரிக் கமிஷனர் ஹியூ மொலிகொட சொன்னார்.

### இன்று

யாழ்ப்பாணம், பெப். 15

நவாலி இளம் கிறிஸ்தவர் வாலிபர் சங்கத்தின் 96 ஆவது வருடாந்தக் கூட்டம் இன்று (15.2.86) பிற்பகல் நடைபெறுகிறது.

சங்க அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் என்று செயலாளர் திரு. என். அன்புராஜா அறிவித்துள்ளார்.

* * *

யாழ்ப்பாணம், பெப். 15

"மாற்று'' எனும் காலாண்டு சஞ்சிகை விமர்சன அரங்கு இன்று மாலை 4மணிக்கு நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

நிலையத் தலைவர் திரு. நா. அலோசியஸ் தலைமை வகிப்பார்.

திரு சொக்கன், திரு. இ. மயில்வாகனம், திரு. ஈழத்து சோமு, திரு. புதுவை இரத்தினதுரை, திரு. செ. துரைசிங்கம், திரு. வ. வேலாயுத பிள்ளை ஆகியோர் விமர்சன உரை ஆற்றுவார்கள்.

### கப்பலில் தீ

கொழும்பு, பெப், 15

இலங்கையின் ஆராய்ச்சிக் கப்பலான 'சமுத்திர மாறு'வில் தீவிபத்து ஏற்பட்டது.

கடந்த புதன்கிழமை இரவு கொழும்புத் துறைமுகத்தில் நின்ற சமயம் விபத்துக்குள்ளானது.

இது சதிச் செயல் அல்ல என்று துறைமுக வட்டாரங்கள் கூறின.

### ராணுவ - - - -

(1-ம் பக்க தொடர்ச்சி)

கண்ட எச்சரிக்கையை வெளியிட்டார்.

கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மேலும் சொன்னதாவது;-

இலங்கை அரசு ஒரு பக்கம் பேச்சுக்களை நடத்துவதாகப் பாசாங்கு செய்கிறது.

அதே நேரத்தில் இராணுவத்தீர்வு ஒன்று காணவே முயல்கிறது.

இராணுவத் தீர்வு காண முயல்வதன் மூலம் நாட்டின் நிர்வாகமே சீர்குலைந்து விட்டது.

அரசின் போக்கே முற்றும் பிழையான பாதையில் அமைந்து உள்ளது.

இப்படி கலாநிதி டி சில்வா சொன்னார்.

### ஆய்வரங்கு

காவிரிநீர் மாசடைவதை தடுப்பதற்கு திட்டம் ஒன்று உருவாக்கப்படும்.

இதற்கான அம்சங்களை ஆராய்வதற்கான ஆய்வரங்கு ஒன்று மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் துவக்கி வைக்கப்படுகிறது.

### உயிர் - - -

(1-ம் பக்க தொடர்ச்சி)

உயர் அதிகாரி ஒருவர் மேற்படித் தகவலைத் தெரிவித்தாராம்.

பிரங்கிப் படகில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டபோது இவர் படகின் உள்ளே படுத்திருந்தபடியால் இவருக்கு காயம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளைதேற்று வெளியான இந்தத் தகவல்களை அடுத்து பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஏனைய மீனவர்களின் உறவினர்கள், இன்று பலாலி இராணுவ முகாமுக்குச் செல்லுகின்றனர்.

இவர்களுக்கான அனுமதிக் கடிதங்களை கிராம சேவையாளரும் தலைமை அலுவலக உதவி அரசாங்க அதிபரும் வழங்கியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org